# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. II Issue 2 May 2012

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்


பக்கம்

இம்மாதச் செய்தி ........ 2

லைப் டிவைன் ........ 3

சாவித்ரி ........ 21

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 23

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 28

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 31

லைப் டிவைன் - கருத்து ........ 35

அஜெண்டா ........ 37

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 39

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 40

"உன் திருவுள்ளம்...." ........ 48

நம்முடைய Higher Selfஐ மதித்து நடத்தல் ........ 53

அன்பர் அனுபவம் ........ 62


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

பதற்றமும், டென்ஷனும் அதிகமான நேரந்தான் நாம் மிகவும் அமைதியாக இருக்க வேண்டிய நேரம். அன்னையின் திருவுருவப் படத்தின்முன் அமர்ந்தால் அமைதி தானாக வரும்.

பலனைச் சமர்ப்பணம் செய்பவர் வேலையைச் சமர்ப்பணம் செய்வது வாழ்வு யோகமாகும் பாதையாகும்.

நேரம் போவது நேரத்தை பொறுத்ததில்லை, நினைப்பைப் பொறுத்தது.

குறைந்தபட்சம் ஒரு தடவையாவது நம் வாழ்க்கையில் லைஃப் ரெஸ்பான்ஸின் முழு உண்மை வெளிப்பட வேண்டும்.

அப்படி வெளிப்படும் பொழுது தோட்டத்துக் கால்வாயில் காவிரி பொங்குவது போலாகும்.

இம்மாதச் செய்தி

## வேதம் ஆன்மாவின் அருட்காவியம்.





# லைப் டிவைன்

கர்மயோகி

## XXII. The Problem of Life
## 22. வாழ்வின் பிரச்சனை

### பக்கம் 207 - பாரா 1

வாழ்வு சித்-சக்தியில் உற்பத்தியாகிறது. இதற்குரிய நேரம் உண்டு. சித்-சக்தி அனந்தம், பிரம்மம். எதனாலும் கட்டுப்படுத்தப்படாதது. அதன் ஐக்கியம் அதற்கேயுரியது. ஆனந்தமும் அப்படியே. சித்-சக்தி சச்சிதானந்தப் பகுதி. பிரபஞ்ச வாழ்வுக்கு முக்கிய நேரமுண்டு. அதன் தோற்றம் மாறுபட்டது. அனந்த வாழ்வின் தூய்மையில் உறைவது சித்-சக்தி. பகுக்க முடியாத சக்தியை அது சொந்தமாகப் பெறுவதிலும் அது சித்-சக்தியிலுறைகிறது. வாழ்வு மனத்தின் திறன். அறியாமை மனத்தை இருளால் சூழ்கிறது. மனம், பகுக்கப்படாத சக்தியின் பகுதியான துண்டு. இதன் விளைவாக இரட்டைகள் - ஒளி, இருள் - எழுகின்றன. எதிர்ப்பு, சச்சிதானந்த மறுப்பு, ஆகியவை தோற்றமாக எழுகின்றன. அவை சச்சிதானந்தத்தின் சுபாவம். மனம் அதை முடிந்த முடிவாகக் கொள்கிறது. என்றாலும் அது தோற்றமே. பல்வேறு கூறுகளையுடைய சத்தியத்தை அவை பிரதிபலிக்கின்றன. அது பிரபஞ்ச ஜீவியம். மனத்திரையின் பின் அது மறைந்துள்ளது.

அதனால் பிணக்காக அவை தோன்றுகின்றன. ஒவ்வொன்றும் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்கிறது. ஒவ்வொன்றிற்கும் அவ்வுரிமையுண்டு. எனவே, திரளான பிரச்சனைகளும் புதிர்களும் எழுகின்றன. அவற்றையெல்லாம் தீர்க்க வேண்டும். இக்குழப்பத்தின் பின்னணியில் மறைந்த சத்தியமுள்ளது. ஐக்கியமும் அங்குறைகிறது. அவை தீர்வை நாடுகின்றன. அத்தீர்வு திரை மறைவிலிருந்து வெளிவருகிறது. திரை அப்படி விலகுவது சிருஷ்டி.

**பக்கம் 207 - பாரா 2**

தீர்வு மனத்தில் காணப்பட வேண்டும். ஆனால் மனம் மட்டும் அதைச் செய்ய முடியாது. தீர்வு வாழ்வில் எழ வேண்டும். சொல்லப்போனால் தீர்வு ஜீவனின் செயலுக்குரியது. மேலும் அதை ஜீவனின் ஜீவியத்திற்குரியது எனவும் கூறலாம். ஜீவியம் சக்தியாகச் சிருஷ்டிக்கிறது. அது உலக நிகழ்ச்சிகளையும், பிரச்சனைகளையும் உற்பத்தி செய்கிறது. எனவே ஜீவியம் சக்தியாகி பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும். எப்படியும் இப்பிரச்சனைகள் அதனால் உற்பத்தியானவை. அது உலக இயக்கத்தை அதன் இயல்பான பூர்த்திக்கு அழைத்துச் செல்லும். அதுவே சத்தியப் பரிணாம வளர்ச்சியின் இரகஸ்யம். வாழ்வு தோற்றமாயிற்று. அவை தொடர்சங்கிலி. அவற்றுள் மூன்று கட்டங்களுள. அவை ஜடமானவை. அது ஜீவியத்துள் அமிழ்ந்துள்ளது. அது தன் மேலெழுந்தவாரியான ஜீவியத்துள் மறைந்துள்ளது. அது தன்னை வெளிப்படுத்தும் செயல். அவை சக்தியின் ரூபங்களின் பிரதிநிதி. செயலின் பார்வையிலிருந்து ஜீவியமே மறைந்துவிடும். அது ரூபத்தில் தன்னை இழந்தது. இரண்டாவது பிராணனுக்குரியது. அது வெளிவரும் ஜீவியம். அது வாழ்வின் சக்தியாகப் பாதி தெரிகிறது. அது வளரும் வழி, செயல், ரூபம் அழிவது. அதன் ஆதியான சிறையினின்று பாதி விடுதலை பெறும். அது தன் சக்தியில் துடிப்புடையது. அதை



உயிரின் வேகமாக அறிகிறோம். அதைத் திருப்தியாகவோ, வெறுப்பாகவோ அறிகிறோம். முதலில் அது ஜோதியின் பிழம்பாக இல்லை. அது பூரணமற்ற தோற்றம். ஜோதி தன் சுய வாழ்வின் ஞானம். அது சூழலின் ஞானமுமாகும். மூன்றாவது மனத்தின் உணர்வு. அது கருத்து. பிரதிபலிக்கும் உணர்வு. புதுக்கருத்தாக அது வாழ்வின் விபரமாகிறது. ஜீவனின் உள்ளூறை வாழ்வின் மாறுபாடு அது. புற வாழ்வை தகுந்த மாதிரி மாற்றிக் கொள்கிறது. இது மனம். அதன் ஜீவியம் தன் சிறையிலிருந்து விடுதலை பெற்றது. அதன் விடுதலை செயலிலும் ரூபத்திலும் தெரியும். அது தனிமனித ஜீவியமாக வரும். அது ஒரு சிறு பகுதியை மட்டும் அறியும். தன் முழுச் செயலின் பகுதியாகும்.

**பக்கம் 208 - பாரா 3**

வாழ்வினது சிக்கல்களின் சிகரம் இங்குள்ளது. அதுவே சிரமம். மனிதன் மனத்தாலான ஜீவன். மனத்தின் ஜீவியம் மனத்தின் சக்தியாக வேலை செய்கிறது. அது பிரபஞ்ச சக்தியையும் வாழ்வையும் அறியும். மனிதன் அதன் பகுதி. தன் வாழ்வுக்குப் பிரபஞ்ச அம்சமுண்டு என மனிதன் அறியான். தன் ஜீவனின் முழுமையையும் அறியான். பொதுவாக வாழ்வை அவனால் சமாளிக்க முடியவில்லை. வெற்றிகரமாக வாழ்வை அவன் சமாளிப்பது அவசியம். ஜட சூழலை அவன் வெல்ல முயல்கிறான். அதனால் அவன் ஜடத்தை அறிய முற்படுகிறான். அதே போல் ஜட வாழ்வை ஆள முற்படுகிறான்.

அதற்கு அவன் வாழ்வை அறிய வேண்டும். அவன் மனப்போக்கின் விளைவுகளை அறிய அவன் முதலில் தன் மனத்தை அறிய வேண்டும். அது பெரிய இருண்ட சலனம். அங்கு அவன் ஒரு ஒளிப்பிழம்பு. அது தன்னையறியும் தழல். அவன் அப்பொழுது விலங்கு போலுள்ளான். மேலும் மேலும் வளரும் ஞானப் பிழம்பு அவன். தன்னை முழுமையாக

ஆட்கொள்ள அவன் தன்னையறிய முற்படுகிறான். உலகையறிய அவன் உலகை ஆட்கொள்ள வேண்டும். இதுவே அவனுள் எழும் வேகம். அது அவனுடைய ஜீவியத்தின் அவசியம். அவன் வாழ்வின் உத்வேகத்தின் சக்தியது. அது சச்சிதானந்தத்தின் இரகஸ்யமான மன உறுதி. அது உலகில் தனி மனிதனாக எழுகிறது. மனிதன் அதில் வெளிப்படுகிறான். இருப்பினும் அவன் சச்சிதானந்தத்தை மறுக்கிறான். தன் உள்ளுறை உந்துதல்களைத் திருப்தி செய்யும் நிபந்தனைகள் அவை. இவற்றைக் காண்பது மனிதனுடைய பிரச்சனை. இவற்றை தீர்க்க முயல்வது அவனுடைய கடமை. இல்லாவிடில் அவன் சுபாவமே அவனை வற்புறுத்தும். உள்ளுறை தெய்வம் அவனை ஓட ஓட விரட்டும். இப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். உந்துதல் திருப்தி அடைய வேண்டும். அதுவரை மனித குலம் ஓயாது. மனிதன் தன்னைப் பூர்த்தி செய்வது அவசியம். தன்னுள் உள்ள தெய்வத்தைத் திருப்தி செய்வதால் அதைச் செய்ய முடியும். அல்லது அவனுள்ளிருந்து புதிய பெரிய ஜீவனை அவன் சிருஷ்டிக்க வேண்டும். அது அவனால் முடியும். மனித குலம் தெய்வீகமாகும். இல்லையெனில் அவன் சத்திய ஜீவனுக்கு வழி விட வேண்டும்.

### பக்கம் 209 - பாரா 4

நிலையின் இயற்கைக்குரியது இது. மனிதனுடைய ஜீவியம் முழுவதும் ஒளிமயமானதல்ல. அது இருளினின்று - ஜடத்தின் இருளினின்று - முழுவதும் விடுபடவில்லை. பெரிய வெளிப்பாட்டின் வளர்ச்சியில் அது ஒரு அம்சம். பரிணாம சிருஷ்டியின் போக்குக்குரியது. மனிதன் அங்கு எழுகிறான். அவன் இப்பொழுதுள்ள இடத்தில் நிற்க முடியாது. அவனது தற்கால நிலையைக் கடந்து அவன் செல்ல வேண்டும். அல்லது தன்னையே அவன் கடந்து செல்ல வேண்டும். இல்லையெனில் மனிதனுக்கு முன்னேறும் சக்தியில்லை. மனத்தின் கருத்து வாழ்வின் செயலாக முயல்கிறது. வாழ்வின் முழுச் சத்தியமானால்



அம்மாற்றம் ஏற்படுகிறது. தொடர்ந்த மேலுறைகளினின்று தன்னை அது விடுவித்துக் கொள்கிறது. அது ஜோதியாக வெளிப்படுகிறது. அதுவே அது பூர்த்தி பெறும் வகை. ஜீவிய ஒளியில் அது முழுமை பெறுகிறது. அங்ஙனம் அது சக்தியில் சந்தோஷ நிறைவடைகிறது. பவரும் வாழ்வும், வாழ்வின் இரு கூறுகள். அப்பொழுது அது வெளிப்படுகிறது. ஜீவியமும், சக்தியும் வாழ்வின் சுபாவம். மூன்றாம் கட்டமுண்டு. முதலிரண்டும் மூன்றாவதில் இணைகின்றன. அங்கு அவை ஒன்றாக இணைகின்றன. முடிவாக அவை அங்கு முழுமை பெறுகின்றன. திருப்தியுறும் ஆனந்தத்தின் சுயவாழ்வு அது. மனித வாழ்வு பரிணாம வாழ்வு. அதற்கு அது தவிர்க்க முடியாத முடிவு. அதாவது தன்னைக் காண்பதாகும். பிறவியில் பிரம்மம் வித்தாக மறைந்துளது. தன்னையறிவதெனில் உள்ளதை முழுவதும் விபரமாக வெளிப்படுத்துவதாகும். சித்-சக்தியெனும் சலனத்தில் அவை புதைந்துள்ளன. இவ்வாழ்வு அதில் உற்பத்தியானது. அதன் சத்து மனித வாழ்விலடங்கியது. அது சச்சிதானந்தம். ஒரு வகை சுமுகமான ஐக்கியத்தில் அவன் அவற்றையடைகிறான். அது தனி மனித வாழ்வு. அதுவே பிரபஞ்ச வாழ்வு. இதை மனித குலம் பொதுவான ஜீவியத்தில் வெளிப்படுத்தும். பொதுவான சக்தியின் சலனத்தில் அது வெளிப்படும். மேலும் பொதுவான ஆனந்தமாக அது எழுகிறது. அது பிரம்ம அம்சமுள்ளது. இந்த ரூபங்களில் அது தன்னை இழந்துள்ளது.

### பக்கம் 209 - பாரா 5

வாழ்வுக்கு அடிப்படையான நிலையுண்டு. அது தன் அடிப்படை அமைப்பான ஜீவியத்தையுடையது. அதன் சுபாவத்திற்குரிய வாழ்வு அதைப் பொறுத்தது. சக்தி ஜீவியத்தைப் போன்றது. ஜீவியம் அனந்தம். ஜீவியம் ஒருமையுடையது. தன் செயலையும் ரூபத்தையும் கடந்தது. செயலைத் தழுவி அதனூடே செயல்படும் பொழுது அப்படியேயிருக்கும். சச்சிதானந்த ஜீவியம் அத்தகையது.

சக்தி அதைப் போன்று அப்படியேயிருக்கும். அதன் வீச்சு அனந்தமானது. அதன் செயலில் ஒருமையுடையது. தன் பவர் சுயஞானத்தைக் கடந்தது. ஜீவியம் ஜடமான இயற்கை போன்றுமிருக்கும். அது மூழ்கி தன்னை மறந்துளது. தன் சக்தியால் நடத்தப்பட்டு அது விரைவாகச் செல்கிறது. அவற்றின் தொடர்பு அனந்தமான சுபாவமுடையது. அது அதன் சுபாவம். ஜீவியம் சக்திக்குள்ள தொடர்பைப் பொறுத்தது. சக்தி அப்படியிருக்கும். அது ராட்சச சலனம். அது ஜடமாகவும் ஜட இருளாகவுமுள்ளது. அது எதைப் பெற்றுள்ளது என அறியாது. பார்வைக்கு இயந்திரம் போலிருக்கும். ஒரு எதிர்பாராத சந்தர்ப்பம் போன்றதில் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். அது தவிர்க்க முடியாதது. அது சத்தியம், நியாயம் என்ற சட்டம். பரமாத்ம ஜீவனின் உறுதியால் அது நிர்ணயிக்கப்படுகிறது. தன் இயக்கத்தினுள் அது முடிகிறது. ஜீவியம் பிரிந்திருக்கும். மனதில் அது போல் உள்ளது. பல மையங்களில் அடங்கி செயல்படுகிறது. ஒவ்வொன்றும் தன்னைப் பூர்த்தி செய்ய முயல்கிறது. அடுத்த மையத்திலிருப்பதை அவை அறியா. மற்றவற்றுடன் உள்ள தொடர்பை அறியா. பார்வைக்கு அவை பிரிந்து தெரியும். அவற்றுள் சக்தியும் பொருளும் உண்டு. அவை ஒன்றுக்கொன்று எதிரானவை. அவற்றின் உண்மையான ஐக்கியத்தில் அப்படியில்லை. சக்தி அப்படிப்பட்டது. நம்மைச் சுற்றியும் நம்முள்ளும் வாழ்வைக் காண்கிறோம். அது அப்படிப்பட்ட வாழ்வு. சக்திகள் மோதுமிடம் அது. தனி மனித வாழ்வு இணைந்து பிணையும் நிலை. ஒவ்வொன்றும் தன் முழுமையை நாடுகிறது. மற்றவற்றுடன் உள்ள தொடர்பை அவையறியா. அது முரண்பாடு. சக்தியைச் சிரமப்பட்டு ஏற்கும் நிலையது. அவை பிரிந்து எதிர்க்கும். அவை வேறுபடும். மனத்தில் அதிர்ச்சி கலந்தது. அது போராட்டம். அது நிலையற்ற தொடர்பு. பிரிந்து, மாறுபட்டு, எதிர்க்கும் சக்திகள் அவை. தன் அவசியத்தை அவை அறிவதில்லை. அது மற்றதற்கு அவசியம். ஐக்கியத்தின்



அம்சங்களில் தன் நிலையை அறியாது. அவை பின்னணியில் வெளிப்படும். அங்குப் பிணக்கழியும். ஜீவியம் ஐக்கியத்தையும் பிரிவினையையும் உடையது. ஐக்கியத்துள் பிரிவினையுண்டு. அது அதை ஆள்கிறது. அப்பொழுது அதற்குச் சத்தியம், சட்டம், நியாயம், தனிமனிதனதும் முழுமையதும் தெரியும். அவையிரண்டும் தம்மையறிந்து பரஸ்பர ஒற்றுமையில் சுமுகமாகின்றன. அங்கு ஜீவியத்தின் முழு சுபாவமும் ஒருமையுடையது. அதற்குத் தன்னைப் பல என அறியும் திறனுண்டு. பல தங்களை ஒன்றாக அறியும். அங்குச் சக்திக்கும் அதே சுபாவமுண்டு. அப்படிப்பட்ட வாழ்வது. ஐக்கிய சட்டத்தை ஏற்கும். அதற்குரிய சட்டம் முறைப்படி அவை நடக்கும். எல்லா ஜீவன்களும் தன்னில் வாழும் வாழ்வாகும். அவை பிறரிலும் தன்னிலும் வாழும். தன்னையறியும் ஒரு ஜீவன் பல ஆத்மாவில் வாழ்வது அது. ஒரே ஜீவியம் பல மனங்களில் செயல்படுவது அது. சக்தியும் ஒரே சந்தோஷம் பல வாழ்வில் உறைவதாகும். ஒரே சத்தியமான ஆனந்தம் தன்னைப் பூர்த்தி செய்து கொள்வது. அவை பல இதயங்களிலும் உடலிலும் நடக்கின்றன.

### பக்கம் 211 - பாரா 6

இந்த நான்கு நிலைகளில் முதல் நிலை இவற்றின் ஆரம்பம். இவை தொடர்ந்து வளரும் கட்டங்கள். இவை ஜீவியத்திற்கும் சக்திக்கும் இடையேயுள்ளன. இது ஜீவனுக்குரிய நிலை. இது சச்சிதானந்தத்திலுள்ளது. அங்கு நான்கும் ஒன்றே. அங்குச் சக்தி ஜீவனின் ஜீவியம். ஜீவியமாக இருப்பதைத் தவிர்க்காமல் அது செயல்படுகிறது. மேலும் அங்கு ஜீவியம் இதே போல் பிரகாசமான ஜீவனின் சக்தியாகும். அது என்றும் தன்னையறியும். அது தன் ஆனந்தத்தை அறியும். பூரண ஆனந்த சக்தியாக இருப்பதில் அதற்கு என்றும் குறைவு வாராது. அது தன்னை ஆள்வது. இரண்டாம் நிலை ஜட சுபாவம். அது ஜடலோகத்திற்குரிய ஜீவனின் பவர். அது சச்சிதானந்தம் தன்னையே மறக்கும் நிலை.

இங்கு ஜீவியமும் சக்தியும் முழுமையாகப் பிரிந்து தோன்றுகின்றன. அது விநோதமான ஆச்சரியம். அனைத்தையும் ஆளும் குறையற்ற ஜட இருளின் ஆச்சரியம் அது. அது போர்வை. தற்கால ஞானம் இதைப் பிரபஞ்ச தெய்வ சக்தியெனத் தவறாக நினைக்கிறது. மூன்றாம் நிலை மனத்திலும் வாழ்விலும் உண்டு. மறுப்பு எழுவதில் நாம் அதைக் காண்கிறோம். அது போராடுகின்றது. நிலைமையைக் கண்டு பிரமிக்கிறது. (பணிந்து நிற்கும் வாய்ப்பில்லை. அதற்குத் தெளிவான ஞானமில்லை. வெற்றிகரமான முடிவை இயல்பாக அறியும் திறனுமில்லை.) இவை மனிதனின் தோற்றத்திற்குரிய ஆயிரம் பிரச்சனைகள். திகைப்பூட்டும் நிகழ்ச்சிகளில் அவை கலந்துள்ளன. அது அரைகுறையான தன்னையறியும் ஜீவன். ஜட இருள் லோகத்திலிருந்து அது வெளி வருகிறது. நான்காம் நிலை சத்திய ஜீவியத்திற்குரியது. அது முழுமை பெற்ற வாழ்வு. அது எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கும். பாதியை வலியுறுத்துவதால் ஏற்படும் சிக்கலது. அது முழு மறுப்பிலிருந்து எழுகிறது. இரகஸ்யமான அனைத்தையும் அது பூர்த்தி செய்கிறது. அது வித்தாக உள்ளது. பரிணாமத்திற்காக அது உள்ளது. பொது மறுப்பின் திரையின் பின்னேயுள்ளது. அதுவே உண்மையான மனிதனின் உண்மையான வாழ்வு. இப்பகுதியான வாழ்வு பகுதியான பூர்த்தி பெறாத மனிதத்தன்மை. முழு ஞானத்துடன் அது முயன்று முன்னுக்கு வருகிறது. நாம் ஜட இருள் என அழைப்பதின் வழிகாட்டுதல் அது. நாம் உணரும் பகுதிகளில் ஒரு முன்னறிவிப்புள்ளது. அது போராடும் ஓட்டம். இது பூரணத்தின் சிதறிய பகுதிகள். இதற்கு லட்சியத்தின் தோற்றமுண்டு. அது உற்சாகம் தரும் ஞான உதயம். கவி, தீர்க்கதரிசிக்குரியது. ஞானிக்கும் துறவிக்கும் அது உண்டு. அறிஞனுக்கும் சாதுவுக்கும் உண்டு. அவர்கள் பெரிய சிந்தனையாளர்கள். மனித குல மாணிக்கங்கள் அவர்கள்.



**பக்கம் 212 - பாரா 7**

நாம் குறிப்பிட்ட விவரங்களுடன் ஆராய்ச்சியை ஆரம்பித்தோம். அதே அடிப்படையில் செல்கிறோம். மனிதனில் ஜீவியமும் சக்தியும் குறையான அடிப்படையிலிருப்பதால் உள்ள சிரமம் தென்படுகிறது. இதுவே தற்சமயம் மனிதனின் மன, வாழ்வு நிலை. அவை மூன்று. முதலாவதாக அவன் தன்னுள் ஒரு சிறு பகுதியையே அறிவான். அவை அவன் மேல்மன வாழ்வு. அதுவே மேலெழுந்தவாரியான மனநிலை. அது அவன் மேல் நிலையிலுள்ள உடல் வாழ்வு. அவன் அறிந்ததெல்லாம் அதுவே. அதையும் அவன் முழுமையாக அறியமாட்டான். அதன் கீழ், கண்ணுக்குத் தெரியாத வாழ்வுண்டு. அடிமனமும் ஆழ்மனமும் பொங்கி எழுவதால் ஏற்பட்டது அது. மேலும் மனிதனுடைய அடிமன, ஆழ்மன உந்துதல்கள் உள்ளன. ஆழ்மனத்தின் ஜடஉடலும் உண்டு. அவை மனிதனின் பெரும் பகுதி. அவன் அவற்றை அறியான். அவற்றை அவனால் ஆள முடியாது. அது அவனை அறியும், ஆளும். வாழ்வும் சித் சக்தியும் ஒன்றே. நமக்கு ஏதோ சிறிதளவு ஆள முடியும். நாம் நம்மை அறிவதுடன் ஐக்கியமானதால் ஏற்பட்ட வாழ்வு அது. மற்றவை தம் சொந்த ஜீவியத்தால் ஆளப்பட வேண்டும். நம் மேல்மன வாழ்வுக்கு அது அடியில் உள்ளது. அவையிரண்டும் ஒன்றே. அவை இரண்டும் தனிப்பட்ட இயக்கங்களில்லை. எனவே பெரியது சிறியதை ஆள்கிறது. அது பெரியதாகையால் சக்தி வாய்ந்தது. அதன் அளவை அது நிர்ணயிக்க வேண்டும். எனவே நாம் நம் அடிமன, ஆழ்மனத்தால் ஆளப்படுகிறோம். நாமறிந்த வாழ்விலும் அப்படியேயாகும். சில சமயம் நமக்குக் காரியங்கள் பிடிபடும். அது தன்னைத் தானே வழிநடத்திக் கொள்ளும். அதிலும் பெரியதற்கு நாம் கருவியாவோம். உள்ளே அது ஜட இருளாகத் தோன்றுகிறது.

**பக்கம் 212 - பாரா 8**

மனிதன் தன் சொந்த முடிவால் வேலை செல்வதாய் நினைக்கிறான். உண்மையில் இயற்கை அவனுடைய எல்லா வேலைகளையும் செய்கிறது. விவேகிகளும் தங்கள் சுபாவத்தைப் பின்பற்றுகிறார்கள். முன்னோர்கள் கூறியதன் தாத்பர்யம் அதுவே. இயற்கை ஜீவனுடைய சிருஷ்டிக்கும் சக்தியின் ஜீவியம். ஜீவன் நம்முள் உள்ளது. அவனுடைய தலைகீழ் சலனத்தால் அவன் மறைக்கப்படுகிறான். அவன் தன்னையே மறுப்பதாகக் காணும், அவனுடைய ஜீவியத்தின் தலைகீழான சிருஷ்டிக்கும் சக்தியை மாயை என்றனர். அது இறைவனின் மாயை. எல்லா வாழ்வும் மெஷின் போல் இயங்குகிறது என்றனர். அதை இறைவன் தன் மாயையால் நடத்துகிறான். வாழ்வின் இதயத்தில் அவன் வீற்றிருக்கிறான். மனிதன் மட்டுமே இதுவரை தன் மனதால் தன்னைக் கடக்க முடிகிறது. அதனால் அவனுக்கு இறைவன் இருப்பது தெரிகிறது. அவ்விதம் மனிதன் தன்னை ஆட்சி செய்ய முடிகிறது. இது தெளிவு. இது ஜட இருளால் முடியாது. ஆழ் மனதிலும் இது முடியாது. எனவே ஆழத்தில் புதைந்து பெறக் கூடியதில்லை. உண்மையான ஆழம் ஜட இருளில் உள்ளது. இறைவன் அதனுள் உள்ளான். நாம் உள்ளே செல்ல வேண்டும். அங்கிருந்து பரமாத்மாவை நோக்கி உயர வேண்டும். அது சத்திய ஜீவியத்திலுள்ளது. அங்கு இந்த ஐக்கியத்தை ஏற்படுத்தலாம். இதுவே உயர்ந்த தெய்வீக மாயை. இது தெளிவான தன்னையறியும் ஞானத்திலுள்ளது. இது சத்தியத்திலும் சட்டத்திலும் உண்டு. தாழ்ந்த மாயையில் இது ஆழ்மனத்தில் வேலை செய்கிறது. இது செயல்படுவது மறுப்பு. மறுப்பு இவ்விதம் அதற்கு எதிர்ப்பாகிறது. இத்தாழ்ந்த சுபாவம் செயலில் தன்னை வெளிப்படுத்துகிறது. அப்படி வெளிவருவது உயர்ந்த மாயையின் எண்ணம். இது மாயை. இது உலகை தெய்வீகமாக அறிவது. இது தோற்றம். இதைச் சத்திய ஞானம் ஆட்சி செய்கிறது. தோற்றத்தின் பின்னுள்ள சத்தியத்தை அது அறியும். மறுப்புக்கு மறுப்பான ஒப்புதலை அது தயாராகத் தருகிறது. நாம் அதை நாடுகிறோம். மனிதன் பகுதி, தோற்றம். அங்கு மனிதன் உண்மையான சிறப்புடையவன். அங்கு அவன் முழுவதும் தன்னையறிந்தவன். சுய வாழ்வுடன் பூரண ஐக்கியம் பெறுவதால் அவன் தன்னையறிகிறான். அவன் எல்லாம் அறிந்த இறைவன். பிரபஞ்ச பரிணாமத்தைப் பெற்ற இறைவன் அவன்.



**பக்கம் 213 - பாரா 9**

இரண்டாவது பிரச்சனை மனிதன் உலகிலிருந்து பிரிந்துள்ளான். அவன் மனம், வாழ்வு, உடலால் பிரிந்துள்ளான். அவன் தன்னையேயறியவில்லை. உடனுள்ளவர்களையும் அதே போல் அறியவில்லை. பார்க்கப்போனால் இங்கு அது அதிகம். கண்டும், சிந்தனை செய்தும் யூகமாக ஒரு சட்டத்தை ஏற்படுத்துகிறான். பிறரிடம் அனுதாபம் கொள்ள அவனுக்குப் போதுமான திறனில்லை. பிறரைப் பற்றி பொதுவாக மனம் ஒரு அர்த்தமற்ற முடிவுக்கு வருகிறது. ஆனால் அது ஞானமாகாது. ஞானம் தன்னையறிந்து ஐக்கியமாவதிலிருந்து வரும். அதுவே உண்மை ஞானம். அது ஆத்மீக வாழ்வு தன்னையறிவது. நாம் எதை நம்மையறிந்து கண்டுகொள்கிறோம் என்றறிவோம். மற்றவை மறை பொருள். நம்முடைய ஜீவியத்தில் நாம் அதனுடன் ஏதோ ஒரு வகையில் ஒன்றாகலாம். நாம் அதை அறிய முடியும். நாம் அத்துடன் ஓரளவுதான் ஒன்ற முடியும். வழி மறைமுகமாகவோ குறையானதாகவோ இருக்கலாம். பெறும் ஞானமும் அது போலவேயிருக்கும். நாம் வேலை செய்ய அது உதவும். அதில் சற்று கலங்கிய குழப்பமிருக்கும். அது தத்துக்குத்தலானது. இருந்தாலும் நம் மனப்போக்குக்கு அது தெளிவாகப் போதும். ஓரளவு நடைமுறை குறிக்கோளை அவ்வழி எட்டலாம். சில தேவைகள், சில சௌகரியங்கள், ஓரளவு சுமுகம் அப்படி எழும். அது நிலையற்றது, குறையான சுமுகம் என்று நாமறிவோம். தெரிந்து எழும் ஐக்கியமே சிறந்த உறவைத் தரும்.

நம்முடனுள்ளவரிடம் நாம் அறியும் ஐக்கியத்தை அடைய வேண்டும். பிரியத்தால் ஏற்படும் அனுதாபம் போதாது. மனம் புரிவதால் அதையடைய முடியாது. மனத்தின் ஞானமும் அதைப் பெற முடியாது. அது எப்பொழுதும் மேலெழுந்தவாரியான ஞானமாகவேயிருக்கும். எனவே அது குறையுடையதாகவே அமையும். அது விரக்தியும், மறுப்பும் தரும். நாமறியாதது வேகமாகக் கீழிருந்து மேலே வரும். அடிமனம், ஆழ்மனத்திலிருப்பது நமக்குக் கட்டுப்படாது. அவையும் எழும். நம்மையறிந்து நாம் ஒருமையை எட்டலாம். அதனுள் நுழைவதால் அதை நிலைநிறுத்தலாம். அது நாம் ஒன்றான விஷயமாகும். அது பிரபஞ்சமானது. பிரபஞ்சம் முழுமைக்குரியது. பிரபஞ்சம் தன்னையறியும். நாம் அறியாததில் பிரபஞ்சம் தன்னையறியும். அது சத்திய ஜீவியம். இங்கு வாழ்வின் பெரும் பகுதி ஆழ்மனத்திற்குரியது. எனவே நாம் அதை ஆள முடியாது. மனம் இதை இயல்பாகக் கொள்ளும். உடலும், உயிரும் அப்படியே. எல்லாச் செயல்களிலும் தாழ்ந்த ஜீவியம் அகந்தைக்குக் கட்டுப்பட்டது. கட்டுத்தறியில் அது மூன்று முடிச்சால் கட்டப்பட்டது. மனிதனின் தனித்தன்மை பலதரப்பட்ட கட்டுத்தறியது. மேலேயுள்ள சத்திய ஜீவியம் பிரிந்ததில் ஐக்கியத்தைக் காணவல்லது.

**பக்கம் 214 - பாரா 10**

மூன்றாம் சிரமம் உண்டு. அது ஜீவியத்திற்கும் சக்திக்கும் இடையேயுள்ளது. வாழ்வின் பரிணாம சத்தியம் அது. பரிணாமமே வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அது மூன்று தொடர்ந்த ரூபம் பெறுகிறது. அவை ஜடம், வாழ்வு, மனம். ஒவ்வொன்றிற்கும் அதற்கே சொந்தமான சட்டம் உண்டு. வாழ்வும் உடலும் பிணக்கால் போராடுகின்றன. வாழ்வு தன் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும்படி உடலைக் கட்டாயப்படுத்துகிறது. தன் உந்துதல்கள், திருப்திகள், தேவைகளையும் திருப்தி செய்ய வேண்டும். உடலின் திறமை அளவுக்குட்பட்டது. இது போல் வாழ்வைத் திருப்தி செய்ய



அமரத்துவம் பெற்ற உடலால்தான் முடியும். அது தெய்வீக உடலாகும். நம் உடல் அடிமைப்பட்டது. உடல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது. அது வேதனைப்படுகிறது. எந்த நேரமும் இடைவிடாது ஊமையாய் உடல் வாழ்வை எதிர்த்துப் புரட்சி செய்கிறது. வாழ்வு அளவுக்கு மீறி உடல் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கிறது. மனம் உடலையும் வாழ்வையும் எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறது. சில சமயங்களில் மனம் உடலை எதிர்த்து வாழ்வுக்கு உதவும். சில சமயங்களில் மனம் உயிரின் உணர்வைக் கட்டுப்படுத்தும். மனம் உடலின் தசையாலான உருவத்தைக் காப்பாற்ற முயல்கிறது. உயிரின் ஆசைகட்கு ஆதரவு தேவை. மேலும் அளவு கடந்து செயல்படுவதினின்றும், பாசத்தின் வேகத்தினின்றும் உயிர் காப்பாற்றப்பட வேண்டும். மனம் உயிரை ஆட்கொள்ளவும் முயல்கிறது. மனம் உயிரின் சக்திகளைத் தனக்குப் பயன்படுத்த முயல்கிறது. மனம் வாழ்வை முழுவதும் ஆட்கொள்ள முயல்கிறது. மனம் தன் செயலுக்கு அதிகபட்ச ஆனந்தம் பெற முயல்கிறது. மனம் தன் எண்ணம், கலையுணர்வின் இலட்சியங்களை அடைய முயல்கிறது. மனம் மனித வாழ்வின் பூர்த்தியை நாடுகிறது. உயிரும் அடிமைப்படுத்தப்பட்டது. அதையும் தவறாகப் பயன்படுத்தினர். அடிக்கடி அது புரட்சி செய்யும். மனம் அறிவற்ற கொடுங்கோலனாக உயரே வீற்றுள்ளது. இதுவே நம் கரணங்களின் போராட்டம். மனம் இதைத் திருப்தியாகத் தீர்க்க முடியாது. இது தீர்க்க முடியாத பிரச்சனை என்பதால் தீராது. அழியும் உடலிலும் உயிரிலும் அழியாத ஆத்மா ஏற்ற ஆர்வத்தின் பிரச்சனையிது. இது தானே சரி செய்து கொள்ளும். அல்லது இது பிரச்சனையைக் கைவிடும். நாத்திகவாதி போல அது அடங்கலாம். அல்லது நம் தோற்றமான ஆத்மாவின் தர்மத்திற்குக் கட்டுப்படலாம் அல்லது துறவியைப் போன்றோ மதவாதி போன்றோ அது வாழ்வை விலக்கலாம். அவ்விதம் பூவுலக வாழ்வை அது கண்டிக்கலாம். அவ்வழி எளிய வாழ்வின் இனிய

அனுபவத்தை நாடி விலகலாம். சரியான தீர்வு ஒன்று உள்ளது. அது மனத்தைக் கடந்தது. அங்கு அமரத்துவம் சட்டம். அது நம் வாழ்வின் நிலையாமையை வெல்லும்.

**பக்கம் 215 - பாரா 11**

இது அடிப்படையான பிரிவினை. இது இயற்கையின் சக்திக்கும் ஜீவனுடைய ஜீவியத்திற்கும் இடையேயுள்ளது. இயலாமையின் ஆரம்பமிது. மனம் உயிரிலிருந்தும், உயிர் உடலிலிருந்தும் பிரிந்துள்ளது. ஆனால் ஒவ்வொன்றும் தனக்குள்ளே பிரிந்துள்ளது. உடலின் திறமை ஆத்மாவின் இயல்பைவிடக் குறைந்தது. ஆத்மா தன்னையறியும் ஜீவன். அதுவே உடலின் புருஷன். உயிரின் சக்தி உத்வேகமுள்ள ஆத்மாவின் சக்தியைவிடக் குறைந்தது. அது உயிரின் ஜீவன், தன்னையறிவது. அது உள்ளேயுள்ள புருஷன். மனத்தின் சக்தி அறிவு உணர்வின் ஆத்ம சக்திக்குக் குறைந்தது. இதுவே உள்ளேயுள்ள மனத்தின் புருஷன். ஆத்மா உள்ளேயுள்ள ஜீவியம். தன் முழுமையான சித்திக்கு அது ஆர்வமாக உள்ளது. எனவே அவ்வார்வம் தனிநபர் உருவகத்தை எப்பொழுதும் கலந்ததாக இருக்கும். சக்தி அந்த ரூபத்தில் தன்னையிருத்திக் கொள்கிறது. ஆத்மா எந்த நேரமும் அதை உந்தும். அந்நிலைக்கு ஒவ்வாத தூரத்திற்கு அதை நகர்த்தும். அதைக் கடந்த நிலையது. அவ்விதம் இடைவிடாது அது நகர்த்தப்படும். எனவே பதிலிறுப்பது அதற்குக் கடினம். இந்த நிலையின்று உயர்ந்த நிலைக்குப் பரிணாம வளர்ச்சி பெறுவது அதிகச் சிரமம். மூவகையான ஆத்மாவின் தேவைகளைச் சந்திக்க முயல்கிறது. அது சிதறி ஓடுகிறது. உணர்வும் உணர்வும் மோதுகின்றன. உந்துதல் உந்துதலை எதிர்க்கிறது. இதய எழுச்சி இதய எழுச்சியை எதிர்க்கிறது. எண்ணம் எண்ணத்தை எதிர்க்கிறது. ஒன்றை ஏற்று அடுத்ததை மறுக்கிறது. செய்ததை நினைத்து வருந்தி மீண்டும் வருகிறது. சரிசெய்து, விட்டுக் கொடுத்து மீண்டும் முடிவின்றி சரி செய்ய முயல்கிறது. ஆனால்



அதன் ஞானமும் உறுதியும் அளவுக்குட்பட்டவை. ஞானமும் உறுதியும் பிரிந்துள்ளன. அவை பிணக்கால் பீடிக்கப்பட்டன. ஐக்கியம் மேலே சத்திய ஜீவியத்திலுள்ளது. அங்குதான் எந்த பிரிவினையும் அறிந்து இணைய முடியும். அங்கு மட்டுமே ஞானமும் உறுதியும் சமம். அவை பூரண சுமுகம் பெற்றன. அங்கு மட்டுமே சித்தும் சக்தியும் தெய்வீக சமநிலை பெற்றுள்ளன.

**பக்கம் 215 - பாரா 12**

மனிதன் தன்னையறியும் ஜீவனாக வளர்கிறான். அவன் சிந்திக்கும் ஜீவனாகவும் வளர்கிறான். வளரும் அளவுக்குத் தன்னுள் உள்ள பிணக்கையும் அறிகிறான். பிணக்கு அவனுக்குத் தெளிவாகத் தெரிகிறது. அவனது கரணங்கள் பிரிந்து நிற்பதால் ஏற்பட்டது அது. தன் கரணங்கள் சுமுகமடைய வேண்டும் என அவன் முயல்கிறான். அவை அவன் மனம், உயிர், உடலாகும். மேலும் அவன் அறிவும், உறுதியும் சுமுகமாக அவன் முயல்கிறான். அவன் உணர்ச்சியும் சுமுகமடைய வேண்டும். அச்சுமுகம் எல்லாக் கரணங்களிலும் எழ வேண்டும். நடைமுறையில் சரி செய்யும் வழியொன்றுண்டு. ஓரளவு சாந்தி தரக்கூடியது அது. அதைப் பெறும் வாயிலில் மனிதன் நின்றுவிடுகிறான். சமரசம் என்பது பாதி வழியில் நிற்பது. உள்ளுறை தெய்வம் உண்டு. பூரண சுமுகம் பெறும் வரை அது திருப்தியடையாது. நம் முழுமையான பூரண வளர்ச்சியுடன் இணைந்தது அது. அதற்கு பல அம்சமுள்ள வித்துகள் உண்டு. அதற்குக் குறைந்த முடிவு பிரச்சனையை விலக்குவதாகும். பிரச்சனையை விலக்கினால் அதன் தீர்வை விலக்கியதாகாது. அல்லது அது தற்காலிகமான தீர்வாக இருக்கும். ஆத்மா ஓய்வு பெறும் இடமாக அது அமையும். ஆத்மா தொடர்ந்து வளர்ந்து உயர்வது. ஆத்மாவில் சுமுகம் தவிர வேறெதுவுமில்லை. அதன் அடிப்படையான நிபந்தனைகளை அது நாடும். அது பூரணமான

மனநிலை, அத்துடன் அது பூரணமான உயிரின் சக்தியின் லீலையாகும். அது பூரண உடல் வாழ்வு. அந்நிலை தீவிரமான குறைபாடு. அதனுள் எப்படி நாம் பூரணத்தின் சக்தியை நாடுவது. மனம் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு வரையறையும் அடிப்படை. அது நமக்குப் பூரணம் தர இயலாது. உடலோ உயிரோ அதைத் தர இயலாது. அவை மனத்தின் அச்சில் மனத்தின் சக்தியாலானதால் அவற்றால் பூரணம் தர இயலாது. மனம் பிரித்து வரையறையை ஏற்படுத்துகிறது. பவரும் சட்டமும் ஆழ்மனத்தில் உள்ளன. அவை தாழ்ந்த மாயையெனும் திரையால் போர்த்தப்பட்டன. அது ஊமையான எதிர்கால சூசகம். இல்லாத இலட்சியமாக அது எழுகிறது. பரமாத்மாவில் அவை வெளிப்படையாக இருக்கின்றன. அங்கு அது எப்பொழுதும் சித்திப்பது. இருந்தாலும் அது நம்மிடமிருந்து பிரிந்துள்ளது. சுயமான அஞ்ஞானம் என்ற திரை பிரிக்கிறது. சுமுகமாக்கும் பவரையும் ஞானத்தையும் நாம் நாடுகிறோம். அதை மேலே தேட வேண்டும். நாமுள்ள நிலையிலோ, கீழேயோ தேட முடியாது.

**பக்கம் 216 - பாரா 13**

மனிதன் வளர்கிறான். தன்னுள் உள்ள பிணக்கைத் தீவிரமாக அறிவதும் அவன் வளர்ச்சியும் சேர்ந்து வருகின்றன. தன் அறியாமையையும் அவன் அறிவான். உலகத்துடன் அவன் தொடர்பை அது ஆட்சி செய்கிறது. அவனால் அதைப் பொறுக்க முடியவில்லை. ஒரு சுமுகமான சட்டத்தை அவன் நாடுகிறான். அது சுமுகமான தத்துவம். சாந்தி, சந்தோஷம், ஐக்கியமான சட்டம் அது. மேலும் மேலும் அதுவே குறியாக மனிதன் செயல்படுகிறான். இதுவும் மனிதனுக்கு மேலிருந்து வரும். மனிதன் தன் மனத்தை வளர்க்க வேண்டும். அம்மனம் பிறர் மனத்தை அறியும். அப்பொழுது அவனால் தன் மனத்தை அறிவது போல் மற்றவர் எவர் மனத்தையும் அறிய முடியும். நம் மனத்தின் அறியாமையும், தவறாகப் புரிந்து கொள்வதும்



அம்மனத்திலிருக்காது. பிறரைத் தன் போலாக்கும் உறுதியாக அது உணர்ந்து செயல்படும். அவ்விதயம் உணர்ச்சிக்கு உறைவிடமாகும். பிறர் உணர்ச்சியை தன்னுட்கொள்ளும் உணர்ச்சியாக அது இருக்கும். தன்னைப் பூர்த்தி செய்வதைப் போல் பிறரைப் பூர்த்தி செய்யவல்லது அது. அது வாழ்வின் சக்தியாகவுமிருக்கும். பிறர் சக்தியை உணர்ந்து அவற்றைத் தனதாக ஏற்றுக் கொள்ளும். சிறையாகி உலகினின்று தன்னைக் காப்பாற்றிக் கொள்வதாக இல்லாமல் அது உடலாக அமையும். இவையனைத்தும் சத்தியம், ஜோதியின் சட்டப்படி நடக்கும். தவறு, கோளாறு ஆகியவற்றைக் கடந்தது அது. நம்முடைய பாவம் பொய் பிறருடையதுமானவற்றைக் கடந்தது அது. பிறருடைய உறுதி, உணர்ச்சி, வாழ்வின் சக்தியையும் அது அப்படியே நடத்தும். அப்படியே மனித வாழ்வு வாழ்வாக அமையும். அப்படி மட்டுமே மனித வாழ்வு வாழ்வாக அமையும். அப்பொழுது வாழ்வு ஆன்மீகமாகவும், நடைமுறையிலும் ஒன்றாகும். மனிதன் மற்ற மனிதர்களாக உணர்வான். அவ்வழி தனி மனிதன் பிரபஞ்ச மனிதனாவான். ஆழ்மனமும், பாதாளமும் இதையறியும். அவை அங்கு ஓர் நிபந்தனைக்குட்பட்டுள்ளன. நாம் கீழிருந்து மேலே செல்லத் தேவையான நிபந்தனையிது. மனிதன் ஜட இருள் சமுத்திரத்திலுள்ள கடவுளை நாடிச் செல்லவில்லை. அங்கு இருள் இருளால் சூழப்பட்டுள்ளது. மனிதன் தெய்வத்தை நாடுகிறான். இறைவன் காலம் கடந்த ஜோதியில் உறைகிறான். அதுவே நம் ஜீவனின் உயர்ந்த ஆகாயம். அது ஆரம்ப உற்சாகம். வளரும் ஆத்மாவை அது எடுத்து உயர்கிறது. நமது நிலைக்குரியது அது.

**பக்கம் 217 - பாரா 14**

மனித குலம் உயர முயல வேண்டும். அது அன்பால் நடத்தப்படுகிறது. உயிரின் ஆர்வமும் அறிவுடன் தெளிவும் உதவுகின்றன. அவை மனிதனை ஆட்கொள்கின்றன. பரநலம் சாதிக்கிறது. மேலேயுள்ள சத்திய ஜீவியத்தின் ஐக்கியத்திற்கு

அவையிட்டுச் செல்லும். இறைவனுடன் நம்மை அது இணைய உதவுகிறது. நம் ஜீவனோடும் இணைய உதவுகிறது. மனிதகுலத்து நபர்களுடன் இணைய உதவுகிறது. அங்கு முடிவான தீர்வான நன்மையை நாடுகிறது. இல்லாவிடில் மனித குலம் வழி தவறும். வெற்றி மற்றவர்கட்குப் போகும். புதிய படைப்புகளுண்டு. காத்திருக்கும் அன்னையது. இறைவனை நோக்கிச் செல்லும் யாத்திரையில் இது நான்காம் கட்டமாகும்.

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***ஆத்ம வளர்ச்சியின் அகநிலையை வர்ணிப்பது சாவித்திரி.***

***அதை புறமாக்குவது யோகம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***ஆட்டம் கண்ட உணர்ச்சி சாதிக்காது.***

***அமைதியான உணர்ச்சி சாதிக்கும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நம்புபவர்க்குச் சொல்லலாம். சொல்லி நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது.***





## P.138 The first writhings of a cosmic serpent Force

**பிரபஞ்ச சர்ப்ப சக்தியின் முதல் வளைவுகள்**

☆ சமாதியான ஜடம் புதிரான வளைவினின்று நகர்ந்து விலகி

☆ குளிர்தென்றலில் தலையைக் குவித்து நிமிர்த்திற்று

☆ இரவின் இறுக்கம் இதுவரை விலகவில்லை

☆ மனத்தின் மகத்தான மகிமைகளை இன்னும் ஏற்கவில்லை

☆ பதக்கம் தாங்கிய படத்தை ஆத்மாவின் கிரீடமாக்கவில்லை

☆ கண் கூசும் ஆத்ம கதிரவனின் ஜோதியில் எழுந்து நிமிர்ந்து நிற்கவில்லை

☆ அழுகிய நாற்றத்தின் அதிகாரத்தையே கண்டோம்

☆ மந்திர வாசகம் ஜீவிய ஒளியைப் பெற்று மகிழவில்லை

☆ முதிர்ந்து கசந்த காமம் அறியும் புலனுணர்வு

☆ பிண்டமான உடலின் இருண்ட ஜீவனின் கீழே

☆ இருளில் இசையெழுப்பும் சோம்பேறியின் சுறுசுறுப்பு

☆ இயற்கையின் வேகம் எழுந்து பலன் தரும் கருவி

☆ சகதியிலிருந்து எழும் ஆத்ம தாகம்

☆ இறைவனின் இரகஸ்யம் எழும் திரைமறைவு

☆ இரவில் ஒளிந்துள்ள அறியாமை எனும் அழிந்த ஞானம்

☆ வாய்மூடி ஏற்ற ஆபாசம் கடமையான கடுமை

☆ இருண்ட ஜடம் மூடி மறைக்கும் அவசியமான தேவை

☆ இறைவனின் இன்ப எழிலில் காணும் இயற்கையின் மண்

☆ அவனது பார்வை, ஆத்மாவைத் தாங்கி வரும் அதிர்ச்சியின் சூழல்

☆ மிளிரும் ஒளியின் மின்னலை ஊடுருவும் பார்வை

☆ அசைந்தாடும் அஸ்திவாரமற்ற அமைப்பின் இரகஸ்யம்

☆ திடமான அணுக்களின் ஊமை மொழியின் உணர்வான வேகம்

☆ துடிக்கும் தசையும், பதைக்கும் எண்ணமும் பெற்ற தலைமை

☆ மீறி எழும் காமம், பீறிட்டெழும் மன வேக உறுதி

☆ மறைந்த நீரோட்டத்துள் இதையும் அவன் கண்டான்

☆ ஆச்சரியமான மூலத்தின் அதிசயமான செயல்களைக் கண்டான்

☆ புதிரான சக்தி எவருக்கும் புலப்படாத சிக்கல்

☆ இவ்வொளியும் நிழலும் ஆட்டமாய் ஏற்படுத்திய அவன்

☆ இனிய கசப்பு இசைவான வாழ்வின் முரண்பாடு

☆ ஆத்ம இரகஸ்யங்களை அறிவுறுத்தும் உடலசைவு

☆ வேகமான நரம்பின் விரைவான உணர்வு

☆ சுழலும் யந்திரத்தின் சூட்சும ஒளியும் அன்பும்

☆ உறக்கத்தின் நினைவுகளை உற்சாகப்படுத்தும் உத்தரவு

☆ காலம் நுரைத்தெழுந்து ஆழ்ந்த மனத்தின் அம்சங்களைக் கூறும்

☆ இனிய உண்மையில் எழும் தழலின் அளவிலா மறதி

❋❋❋



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/62) மடையனின் வருத்தம் நம்மைப் பாதிக்காதது போல தேவர்கட்கு நம் வருத்தம் புரிவதில்லை.**

☆ **தேவருக்கு மனிதன் மடையன்.**

❋ அறிவு இல்லாததால் மடையனை உலகம் ஒதுக்கிவிட்டது.

❋ ஒரு துறையில் அளவு கடந்து சிறந்தவன் பிறருக்கு மடையனாகத் தெரியும்.

❋ பஞ்சாங்கம் எழுதுபவர் மேதைகள்.

❋ எவ்வளவு படித்தவராலும் அதைக் கற்றுக் கொள்ள முடியாது.

❋ அது பரம்பரை ஞானம் என்பதுடன் மேதாவிலாசமில்லாமல் கற்க முடியாது.

❋ பழைய பஞ்சாங்கம் என்பது இன்று அவச்சொல், கேலிக்குரியது.

❋ ஒருவன், வாழ்வை உலகம் அறிவது போல் அறியாவிட்டால் அவனைச் சமூகம் ஒதுக்கிவிடும்!

❋ நாம் மடையன் என்பவனை சமூகம் சில சமயம் மேதையென அறிந்து idiot-genius மடையனான மேதை என்ற சொல்லை உற்பத்தி செய்துள்ளது.

❋ தேவருக்கு நம் உலக சட்டம் பொருந்தாது.

❋ தங்கள் இஷ்டம் போல் செயல்படுவர் தேவர். அதை உலகம் சரியென ஏற்கும்.

❋ திருக்குறள் கயவரைத் தேவர் போன்றவர் எனக் கூறுகிறது.

❋ கயவர் சட்டத்தை மீறி தங்கள் இஷ்டம் போல் செயல்படுவதால் அவர்களைத் தேவர்க்கு ஒப்பிடுகிறது குறள்.

❋ நாம் கல், மரத்தை ஜடம் என இழிவாகக் கூறுகிறோம்.

❋ ஜடத்தில் அணுவுள் சக்தி ஆயிரமாயிர மைல் வேகத்தில் செல்வதை விஞ்ஞானம் அறியும்.

❋ கண்ணுக்கு அசையாத ஜடம் ஒளி வேகத்தில் தன் அணுவைச் சுழற்றுகிறது.

❋ தோற்றம் வேறு, உள்ளது வேறு.

❋ எந்த மடையனின் அறிவைச் சோதனை செய்ய முயன்றாலும், அவன் அறிவில், அதுவும் அவன் மனம் வேலை செய்யும் துறையில், மேதைக்கு நிகரானவன் எனக் காணலாம்.

❋ தேவ கன்னிகட்குக் கற்பில்லை.

❋ சூரிய குலத் தலைவி ஊர்வசி அர்ஜுனன் மீது பிரியப்பட்டு, அவன் மறுத்ததால், அவனைப் பேடியாகும்படி சபித்தாள்.

❋ தேவர்கட்குச் சட்டமில்லை.

❋ மடையன் படும் வேதனை நமக்குச் சிறுபிள்ளைத்தனமாகிறது.

❋ நம் வருத்தம் தேவர்க்குச் சிறுபிள்ளைத்தனமாகிறது.

❋ தேவருலகம் தெய்வீக மனம் overmind.

❋ தேவர்க்கு சக்தி ஏராளமானாலும், இருளும், அகந்தையும் உண்டு.

❋ மனிதன் தேவரில் மேம்பட்டவன்.

❋ தேவரும் இறைவனையடைய பூலோகத்தில் பிறக்க வேண்டும்.

❋ தேவரும் மடையனும் உயர்ந்தவர்.

❋ மடையன் இவ்வகையில் தேவர்க்கு நிகரானவன்.

❋❋❋



**II/63) அசுரனின் குரல் இனிமையாக இருப்பதைக் கண்டு அதன் பின் கிருஷ்ணன் ஒளிந்திருப்பது தெரிந்தது என பகவான் கூறுவதை, நாம் பின்பற்ற, உணர்வின் மறைவில் அதன் எதிரானது ஒளிந்திருப்பதைக் காண வேண்டும்.**

☆ **அசுரன் கிருஷ்ணனின் மாறுவேடம்.**

❋ இது பகவானுடைய சொந்த அனுபவம்.

❋ அழகான பெண் பால் கொடுக்க வந்ததின் பின் பூதகி இருந்தாள்.

❋ அழகிய மான், மாய மானாக இருந்தது.

❋ நல்லதின் பின் கெட்டதும், கெட்டதின் பின் நல்லதும் இருப்பது திருவிளையாடல்.

❋ மனிதன் தன் குணத்தைப் பின்பற்றக் கூடாது, திருவுள்ளத்தை ஏற்க வேண்டும் என்பதற்காக ஆண்டவன் செய்த ஏற்பாடு இது.

❋ நல்லதை நல்லது என ஏற்பதும், கெட்டதை கெட்டது என மறுப்பதும் மனித உள்ளம், திருவுள்ளமில்லை.

❋ நம்மை விலக்கி ஆண்டவனை ஏற்பது சமர்ப்பணம்.

❋ ஏற்பதையும், விலக்குவதையும் சமர்ப்பணம் செய்தால் திருவுள்ளம் பலிக்கும்.

❋ ஆபத்திற்கு உதவ வந்தவர், பல வருஷ பிரச்சனையைத் தீர்க்கிறார்.

❋ சிருஷ்டி நல்லதும் கெட்டதும் கலந்தது.

❋ நல்லதை எட்டித் தொட நாம் கெட்டதில் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

✳ குருவின் அனுக்கிரகத்தைப் பெற ஆரம்பத்தில் குருவின் தண்டனைகளைக் கடக்க வேண்டும்.

✳ குழந்தை பெரிய மனிதனாக பிரசவ வேதனையில் அவன் வாழ்வு ஆரம்பிக்கிறது.

பல ஆண்டுகள் சிறு குழந்தையை வளர்த்தால் பலன் முடிவாக வருகிறது.

✳ இந்த தத்துவம் முதற் கோணல் முற்றிலும் கோணல் என்பதற்கு எதிரானது.

அதனால் அம்மொழியில் உண்மையில்லை என்று பொருளில்லை.

கர்மம் செயல்படும்வரை, நாம் கர்மத்தை நம்பும்வரை பழமொழி உண்மை.

✳ நாம் ஜீவனில் வாழ கர்மத்தில் ஆரம்பிக்கிறோம்.

✳ நாம் இன்றிருப்பது கர்மம்.

✳ அதனால் கர்மத்தில் - கோணலில் - ஆரம்பிக்கிறோம்.

✳ கர்மம் செயல்படும்வரை விஷயம் கோணலாகவே இருக்கும்.

✳ ‘Tolerable’ பரவாயில்லை என்பதில் ஆரம்பித்து பெம்பர்லியில் முடிகிறது.

✳ கோணலில் ஆரம்பித்தாலும், முழுவதும் கோணலாக இல்லை, முடிவில் பெம்பர்லி வந்தது.

✳ பழமொழி கர்மத்திற்குரியது.

✳ எப்படி ஆரம்பித்தாலும் நல்லதாகவே முடியும் என்பது அன்னைக்குரியது - ஜீவனுக்குரியது.

✳ பரவாயில்லை என ஆரம்பித்து, வம்பு வளர்ந்து, மணப் பேச்சு காரசாரமான திட்டுதலாகி, கடிதம் தொடர்ந்தது. அதுவரை முற்றிலும் கோணல் சரி.

✳ பிறகு அவன் மனம் மாறியது, அவள் மனம் மாறியது.



பிரெஞ்சுப் புரட்சி செயல்பட்டது.

✳ புரட்சி உள்ளே வந்தபின் இருந்த கோணலெல்லாம் ஓடிப் போவதாயிற்று.

✳ குறையான லோகத்தில் பெரும் நல்லது வந்தால் குறை வளரும்.

✳ குறை குன்று போல் வளர்ந்தது.

✳ டார்சி மனம் மாறி தன் குறையை விலக்கி, எலிசபெத்திற்காக அவள் தாயாரையும் ஏற்றுக் கொண்டு, முடிவில் அவளுக்காக ஓடிப் போன லிடியாவையும், பரம எதிரியான விக்காமையும் ஏற்று, அவன் கடனடைத்து, கமிஷன் வாங்கிக் கொடுத்து

*எதுவும் வெளியில் தெரியக் கூடாது என்ற பொழுது*

திருவுருமாற்றம் நிறைவேறி அதையும் லேடி காதரீன் ஜ்வாலையாக வந்து கொளுத்த முயன்றபொழுது பாதை திரும்பி, பெம்பர்லி அவளுக்கு வரதட்சிணையாக வந்தது.

✳ அசுரனின் குரலில் கிருஷ்ணன். லேடி காதரீன் சண்டையில் பெம்பர்லி.

*தொடரும்....*

✳✳✳

**ஜீவிய மணி**

***தனக்கு மட்டும் புரியும்படி பேசுவது சுயநலம்.***

***தன்னைத் தவறு என அறியும் தன்மை மனிதனுக்கில்லை.***

***பிரார்த்தனை தவறியது பெரிய வாய்ப்பு.***

***அனைத்தையும் சரி செய்வது அழைப்பு.***

***நன்றியை உணர்வது சரணாகதிக்கு முன்படி.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 58. நடக்காதது நடக்கும் - அனந்தம் கண்டத்தை ஏற்பது.

- நாமறிந்த செயல்களே நமக்கு நடக்கும்.
- பெரிய இடங்களில் நடப்பது நமக்கு நடக்காது.
- நம் கிராம விசேஷத்திற்கு ஜட்ஜ் வருவதில்லை.
- எலக்ஷன் வந்தபின் எந்த பெரிய மனிதர் வீதி வழியாக நாம் நடக்க உத்தரவு இல்லையோ, அவர் வீட்டிற்கு வந்து ஓட்டு கேட்பார் - அது நடக்காதது நடப்பது.
- நம் நிலைமைக்கு உயர்ந்த நிலை நிகழ்ச்சிகள் நம் வாழ்வில் நடப்பது நடக்காதது நடப்பது.
- அது ஒரு கட்டம் உயர்ந்த நிலையிலிருந்து வரும்.
- உச்ச கட்ட நிகழ்ச்சி, அடி மட்டத்தில் வந்து நடக்கும்.
- மாடு மேய்ப்பவன் மகன் மாடு மேய்ப்பது நடப்பது. அவன் ஆபீசராவது நடக்காதது.
- பிரம்மம் அனந்தம், பெரியது, பிரம்மாண்டம்.
- அணு சிறியது, அடி மட்டத்திலுள்ளது.
- **பிரம்மம் அணுவில் வெளிப்படுவது நடக்காதது நடப்பது**.
- வில்வ மரத்தில் வில்வ இலைகள் இருக்கும்.
- அதைப் பறித்தால் கையில் இலை வரும்.
- அதைப் பறித்தவுடன் அது பொற்காசாவது நடக்காதது.
- எல்லா பெரிய மகான்கள் வாழ்விலும் நடந்தது.
- மும்பய் (பம்பாய்) ஏர்போர்ட்டில் தொலைந்த சாவியை சென்னை ஏர்போர்ட்டில் நினைவுகூர்ந்து தேடினால் கிடைக்காது. கிடைப்பது நடக்காதது நடப்பது.



- நாம் வாழ்வது மனிதன் வாழும் உலகம்.
- மனம் அதைவிட உயர்ந்தது.
- முனி, ரிஷி, யோகி, தெய்வ நிலைகள் மேலும் உயர்ந்தவை.
- சத்திய ஜீவியம் அடுத்த உயர்ந்த கட்டம்.
- **சத்திய ஜீவியம் நம் வாழ்வில் வந்து செயல்படுவது அப்படிப்பட்ட நிகழ்ச்சி**.
- நடக்காததற்கு உதாரணமாக யானை வாயில் போன கரும்பு, திருடன் கையில் கொடுத்த பொருளைச் சொல்வார்கள்.
- எதிரியிடம் நம் முக்கியமான விஷயம் (power) சிக்கியபின் நமக்கு தப்ப வழியில்லை.

  பிரார்த்தனையால் எத்தனையோ காரியங்கள் பலித்தாலும், இது பலிப்பதில்லை.

  பலிக்காது என கைவிட்ட பிறகு எதிரிக்கு மேல் அதிகாரி நம்மைத் தேடி வந்தால், எதிரியிடமிருந்து நம் முக்கிய விஷயத்தைப் பெற்றுத் தருவது நடக்காதது.

***அது ஒருவர் வாழ்வில் நடந்தால் அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.***

- ஊர் முழுவதும் ஒன்று சேர்ந்து நம்மை நிலத்தை விட்டு கிளப்ப முடிவு செய்து ஊரில் உள்ள அத்தனை மாடுகளையும் உள்ளே விட்டால், அதிலிருந்து தப்புவது அரிது.

  **அன்னையை அழைத்து நிலத்தைச் சுற்றி வந்தால் 3ஆம் நாள் எந்த மாடும் உள்ளே வரவில்லை என்பது அனந்தம் அணுவில் வெளிப்படுவது**.

*இந்த அனுபவம் யோகம் பலிப்பதைக் குறிக்கும்.*

✳ சண்டிகேசி வாயில் நல்ல சொல் எழுவது, கெட்ட இராசியுள்ளவர் கையால் நல்ல காரியம் நடப்பது, இலஞ்சத்திற்குப் போர் போனவர் இலஞ்சம் பெறாமல் கையெழுத்திடுவது, பிரார்த்தனைக்குப் புயல் கட்டுப்படுவது, செய்யும் காரியம் 10 அல்லது 20 மடங்கு பெருகுவது, எவரும் SSLC பாஸ் செய்யாத குடும்பத்துப் பையன் பட்டம் பெறுவது, MLAயிடமும் அணுக முடியாதவருக்கு முதன்மந்திரி அறிமுகமாவது போன்றவை இத்தலைப்புக்குரியவை. அவர்கட்கு யோகம் பலிக்கும்.

*தொடரும்.....*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***சப்தம் சலனம்.***

***சலனமின்றி சப்தமில்லை.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***பரநலம் பிறரால் ஏற்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***ஆத்மாவுக்குத் தியானம்; வியாதிக்குத் தூக்கம்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **சட்டம்**

✳ **நல்லது சிறியதானாலும் தன்னிலிருந்து பெரியதை விடுதலை செய்யும்.**

எது அப்படிப்பட்ட சிறிய முக்கியமான காரியம் என எப்படிக் காண்பது. சூட்சுமமானவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கமாட்டார்கள். இந்தச் சட்டத்தைச் சொன்னவுடன் அது போல் அவர்கள் வாழ்வில் பார்த்தது நினைவு வரும். புரிந்து கொள்வார்கள். *இராஜாஜி 1952இல் முதன்மந்திரியானது, கெட்டுப்போன திருமணம் கூடிவந்தது, நிச்சயமாகத் தோற்கும் எலக்ஷன் தடம் மாறி அபரிமிதமாக ஜெயித்தது போன்ற காரியங்களைக் காணாதவரில்லை, கவனிக்காதவருண்டு.*

✳ தானே பார்த்து குறியாக இருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

✳ சொல்லிக் கொடுப்பதில்லை, காட்டியும் கொடுப்பதில்லை.

சொல்லியபின் எப்படி என கேள்வி கேட்பவருக்குப் பலிக்காது, சொல்லக் கூடாது.

எதையும், எவரும், எந்த அளவிலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் செய்ய முடியும் என்பது வாழ்வில் ஆன்மீக சத்தியம்.

நமக்கு நம் விஷயம் முக்கியம்.

உலகத்து வாய்ப்பில் அது கடுகு.

பெரிய ஆத்மா சேவை செய்யலாம்.

சிறிய ஆத்மா தனக்கே சேவை செய்து கொள்ளக் கூடாதா?

இன்று வரை ஒருவர் சம்பாதித்தது, நாட்டுக்கு ஒரு நாளைய வருமானமாக வரும் என்பதை அறிய பிரியப்படுவாரா? செய்வாரா?

*உள்ளே போ*
*--------------------* ***இதுவே சட்டம்.***
*உண்மையாக இரு*

✡ **சீசனில்லாத பொழுது 'கிரேஸ்' மலர் கிடைப்பது**

சீசனில் சாமந்தி ஒரு சாதகருக்குக் கிடைக்கவில்லை.

இவர் டைனிங் ரூமில் சேவை செய்பவர், சாமந்தி தேடினார், கிடைக்கவில்லை.

சீசன் இல்லை என்றனர்.

சீசனில்லாத பொழுது கிரேஸ் கிடைப்பது அன்னையின் சிறப்பான அருள்.

அன்னைக்கு அன்பர் மீது குறிப்பிட்ட அக்கறை அது என அறிய முடியுமா?

இது போல் நடந்தவற்றைக் கணக்கெடுத்து listஆக எழுதலாம்.

இது போல் நடக்காதது இல்லை என அறிய அதிக நேரமாகாது.

நடப்பதெல்லாம் இப்படித்தானே என அனுபவம் கூறும்.

சற்று நம்மை இப்பொழுது கவனித்தால்

குறிப்பிட்ட கிரேஸ் இடைவிடாது செயல்படுகிறது. நமது குதர்க்கமும் அதே போல் இடைவிடாது செயல்படுகிறது எனத் தெரியும்.

குணம் என்பது மனம்.



அன்னையை அறிய மனத்தைக் கடக்க வேண்டும்.

குணத்திற்கு வேலையில்லை.

கெட்ட குணத்திற்கு என்ன வேலை?

***நம்மிடம் பிறர் நடப்பது முழுவதும் நாம் பிறரிடம் நடப்பதாகும்.***

✡ **"100 ரூ." பெற சில சிறு விஷயங்களைக் கருதலாம்**

✳ **தத்துவம்:** **எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாகச் செய்தால் மனத்திலுள்ள எந்த ஒரு காரியமும், எவ்வளவு பெரியதானாலும் தானே முடியும்.**

*விதிவிலக்கு:* விலக்கானவை எழுந்தால் சிறு முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.

இதன் விளக்கத்தை என் நூலில் - **Spiritual Opulence** - படிக்கலாம்.

பட்டியல் உயர்ந்ததிலிருந்து சிறியது வரையும், சிறப்பானதினின்று எளிமையானது வரை எழுதப்பட்டது.

இதைப் பயிலும் வேறொரு முறை தத்துவம்:

✳ **ஒரு துளி நல்லெண்ணமிருந்தால் அன்னைக்கு நம் மீது பாசம் எழும்.**

✳ **உண்மை, இனிமை, பெருந்தன்மை, அடக்கம், தூய்மை அல்லது எந்த நல்ல குணமும் இதைச் சாதிக்கும். எதிரானதும் உண்மை. ஒரு பெரிய பிரச்சனை தீரும் - உதாரணமாக இழந்த வேலை திரும்ப வரும். உங்களை ஒருவர் துரோகம் செய்து திளைத்தால் அது நடக்கும். இது ஒரு சூட்சும ஆன்மீக இரகஸ்யம்.**

**பட்டியல்:**

1) 100% சத்தியம் தரும் தூய்மையை மனம் 30 நாள் பெற வேண்டும்.
2) ஒரு மாதம் அளவு கடந்த தூய்மை, உடல், படுக்கை, அலமாரி, தட்டு, துணி போன்றவை.
3) உள்ளே போ - மனித ஆழத்தைக் கடந்து போ - அன்னையே அங்கிருந்து தன்னையழைக்கட்டும். அப்படி 1 மணி நேரமிருக்க வேண்டும்.
4) 72 மணி நேரம் நயத்தக்க நாகரிகம் பயில வேண்டும். நாம் சந்திப்பவர் மீது நயமான இனிமை உள்ளிருந்து எழுந்து பெருகுவது.
5) *72 மணி நேரம் நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் பற்றி பாராட்டிப் புகழ்ந்து மகிழ்தல்.*
6) *12 மணி நேரம் எவரைப் பற்றியும், எதைப் பற்றியும் தவறாக நினைக்க முடியாத மனநிலை.*
7) நீங்கள் விரும்பும் ஒருவர்க்குத் தினசரி ஒரு வேளை உங்கள் கையால் பரிமாறி அவர் வயிறு குளிர்ந்து இனிக்கிறது எனக் கூறும் வரை 3 நாள் தொடர்ந்து சாப்பாடு போடவும்.
8) ஒரு அம்சத்தில் ஒரு வினாடி அன்னையின் ஆன்மீகப் பெருமையை முழுவதும் பாராட்ட வேண்டும்.
9) கோரம் க்ஷண நேரம் லாவண்யமாகத் தெரிவது.
10) மெய்மறந்து உடல் புளகாங்கிதமாகப் புல்லரிப்பது - மூன்று நாளைக்கு ஒரு நாளைக்கு ஒரு படி.
11) *10 நிமிஷம் அன்னையுள்பட அனைவரையும் மறந்த மகிமை.*
12) ஒரு முறை உண்மையாக "100 ரூபாயை"விட அன்பு உயர்ந்தது என அறிவது.
13) *முழு கிராக்கிக்கு எதிரான முழு நாகரிக இளமை நிறைந்த பண்பு - 12 மணி நேரம்.*

*தொடரும்....*

❋❋❋





## P.33 Reality is one not a sum or a concourse

### சத்தியம் என்பது ஒருமையுடையது, பல அம்சம் சேர்ந்த கூட்டு அல்ல

- ❋ தலை, கை, கால், இடுப்பு போன்றவை மனிதனுடைய அங்கங்கள்.
- ❋ ஆனால் அனைத்தும் சேர்ந்த ஒருமை, பல பகுதிகள் சேர்ந்த கூட்டு அல்ல.
- ❋ உடல், குடும்பம், சத்தியம் ஆகியவை ஒருமையுடையவை.
- ❋ பெட்டி, மெஷின், வீடு ஆகியவை பல பகுதிகள் சேர்ந்து எழுந்தவை.
- ❋ ஒரு மெஷினின் பகுதிகளைப் பிரித்து எடுப்பதைப் போல் உடலைப் பிரிக்க முடியாது.
- ❋ ஒரு மெஷினின் பகுதிகளைப் பிரித்து கூடையில் எடுத்தால் அது மெஷினாகாது, மெஷினின் பகுதிகளாகும்.
- ❋ அவற்றை ஒரு சட்டப்படி இணைத்தால் அது மெஷினாகும்.
- ❋ மெஷினின் பகுதிகள் ஜட லோகத்திற்கும் மெஷின் சூட்சும லோகத்திற்கும் உரியவை.
- ❋ மெஷினைக் கோர்த்து அதற்குரிய ரூபம் எழுந்தால் அந்த ரூபம் சூட்சுமத்திற்குரியது.
- ❋ வீடு, ஜடம்; குடும்பம், சூட்சுமம்.
- ❋ குடும்பம் பிரிந்தால் கூட்டமான வீடாகும்.
- ❋ பிரம்மம் சத்தியம், உலகம் சத்தியம், அவை பிரிந்து

தோன்றினாலும் பிரிக்க முடியாதவை.

- ஒரு மரத்தைப் பல பகுதிகளாக வெட்டிப் பிரித்தால் அது மரமாக இராது, விறகாக மாறும்.
- உலகம் ஒன்று, பிரபஞ்சம் ஒன்று, பிரம்மம் ஒன்று, ஏகன் எனப்படும். அதைப் பிரித்துப் பார்க்கலாமே தவிர, பிரிக்க முடியாது.
- பிரிப்பது மனம், பிரிவினை பார்வைக்குரியது, உண்மையல்ல.
- மனிதன் எந்தக் கட்சியிலிருந்தாலும் ஜாதி அவனை ஒன்றாகச் சேர்க்கும்.
- தொழில், ஜாதி, சொந்த ஊர், மலையாளி, முஸ்லீம் என்பவை நேரம் வந்தால் எத்தனை பிரிவினையிருந்தாலும் சேர்ந்து கொள்ளும்.
- எது எது பிரிந்து தோன்றினாலும் பிரம்மம் என்ற அளவில் அனைத்தும் ஒன்றே.
- இந்தியாவில் பிரிந்துள்ள கன்னட, தமிழ் மக்கள் அமெரிக்காவில் இந்தியர் என்ற அளவில் சேர்ந்து கொள்வார்கள்.
- பிரம்மம் பிரிவினையை அனுமதிக்காது, பிரிக்க முடியாதது.
- ஆத்மா என்பது ஒருமை, ஐக்கியம் உடையது.
- ஆத்மாவையடைய நாம் ஐக்கியத்தை நாட வேண்டும்.
- பிரம்மம், சத்தியம், வாழ்வு, ஜீவன், ஜீவியம் என்ற நிலைகளில் ஐக்கியம் அதிகமாகத் தெரிவது போல் பொருள்கள், எண்ணம், உணர்ச்சி ஐக்கியத்தை வெளிப்படுத்துவதில்லை. அவை பிரிந்தே தோன்றும். உண்மையில் பிரிவினையில்லை.
- பல நாடுகள், பல மதங்கள், பல கலாச்சாரங்களாக மனித குலம் பிரிந்து தோன்றினாலும் மனித குலம் ஒன்றே, மனித சுபாவம் ஒன்றே, மனித குல இலட்சியம் ஒருமையை இறைவனில் காண்பதாகும்.

❋❋❋





## Sri Aurobindo envelopes and dissolves conflicts (Volume 2, Page 152)

## பகவான் பிணக்கை ஏற்று சூழ்ந்து கரைத்து விடுகிறார்

- அன்னை முரண்பாடுகளை வரவேற்று ஆதரிப்பது பழக்கம்.
- பொதுவாக முரண்பாடுகளைத் தவிர்ப்பது உலக வழக்கம்.
- புத்தரை ஒருவன் திட்டினான். அவர் நின்று அமைதியாகக் கேட்டுக் கொண்டார், முடிவில் அவன் நேர் எதிராக மாறி அவருக்குச் சிஷ்யனானான்.
- திட்டு, எதிர்ப்பு, முரண்பாடு, பிணக்குகளை மனிதர்கள் விட்டு விலகுவார்கள்.
- எதிர்ப்பைத் தாங்க முடியாமலும், தவிர்க்கும் எண்ணத்திலும் மக்கள் விலகுவார்கள்.
- எதிர்ப்பின் தன்மையை அறிந்தவர், எதிர்ப்பு வலிமையற்றது என அறிவர்.

  வலிமையற்றதை ஏற்றுக்கொள்வதால், அது தன் பலஹீனத்தை அறியும் வாய்ப்புண்டு.
- எதிர்ப்பு பலஹீனத்தை அறிந்தால் பலஹீனம் அதிகமாகும், முடிவில் கரையும்.
- பகவானுடைய சூழலுள் நுழையும்பொழுது மிருதுவான உணர்வேற்படும் என்பது அவர் சூழல் நுழைபவரின் குறைகளைக் கரைக்கிறது என்பதால்.
- மனம் முரண்பாடான கருத்தையறியும்பொழுது சீறும்.
- ஏற்றுக்கொண்ட முரண்பாடு சீற்றமாகும்.

- ஆராய்ச்சியின் பலனாக முரண்பாடு உடன்பாடு என அறியும் பொழுது சீற்றம் அமைதியுறும்.
- தபஸ்வி ஞானம் பெறும்பொழுது மனம் சாந்தமடைவதின் காரணம் இதுவேயாகும்.
- உடலாலான மனிதனுக்குக் கருத்து வேறுபாடு எழுந்தால் சண்டை எழுகிறது.
- அக்காலத்தில் அண்டை நாடுகள் வேறுபாட்டை சண்டையிட்டு தீர்த்துக் கொண்டனர்.
- நாகரிகம் வந்தபின் போர்க்களம் பேச்சு வார்த்தை நடக்கும் மகாநாடாகிறது.
- அதன் விளைவாக வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டு, இருநாட்டு செல்வமும் வளர்கிறது.
- உடலால் வாழ்பவன் வளர்ந்து அறிவால் சண்டையிட்டு அழியும் சக்திகள் பரஸ்பரம் செழிக்கும் செல்வமாக மாறுகின்றன.
- நாகரிகம் என்பது அறிவு வளரும் செல்வம்.
- குடும்பம் சச்சரவைக் கைவிட்டு சமாதானத்தை மேற்கொண்டால் பண்பால் உயர்ந்து வாழ்க்கைத் தரம் உயரும். குடிசை வாழ் மக்கள் நடுத்தர வர்க்கமாவார்.
- அசோகர் காலத்தில் பல இந்திய ராஜ்யங்கள் ரோமாபுரியைப் போன்று உயர்ந்த அரசாட்சியை நடத்தின என பகவான் கூறுகிறார்.
- 2500 ஆண்டுகட்கு முன் அசோகன் போரைக் கைவிட்டான் எனில் இந்திய நாகரிகம் அன்று இன்றைய உலகைவிட உயர்ந்த நாகரிகம் பெற்றதாகும்.
- நாகரிகம் என்பது மனநிலை, பொருள் நிலை, வாழ்வு நிலை.
- இக்கண்ணோட்டத்தில் இன்றும் இந்திய மக்களின் மனநிலை ஐரோப்பியர், அமெரிக்கர் மனநிலையிலும் உயர்ந்தது.
- மக்கள் அமெரிக்காவைக் கொண்டாடலாம். அது உண்மையில்லை.

❀❀❀



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

264. *ஊரார் வீட்டு நெய்யே, என் பொண்ஜாதி கையே.*

**கை பெரிதானால், நெய்யிக்குக் குறைவிருக்காது.**

265. *கட்டி வைத்த பணத்தைத் தட்டிப் பறித்தார்போல்.*

**தட்டிப் பறிப்பவரெல்லாம் தாம் கட்டி வைத்தப் பணத்தைத் தருபவர்.**

266. *ஆற்றிலே போகுது தண்ணீரை, அப்பா குடி ஆத்தாள் குடி.*

**நாடெல்லாம் செல்வம் கொழிக்கிறது. நாமெல்லாம் அதிர்ஷ்டக்காரர்.**

267. *பிள்ளைப் பெறப் பெற ஆசை.*
*பணம் சேரச் சேர ஆசை.*

**நினைக்க நினைக்க நெஞ்சம் ஆத்மாவாகும்.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

***தொந்தரவு உள்ளிருந்துதான் வரும். வெளியிலிருந்து வரவே வராது.***

***உள்ளது ஒன்றே.***

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 2. சத்திய ஜீவியம்

1972இல் வேலை தேடி வந்த ஓர் இளைஞரை, மைய வெளியீடு ஒன்றை விற்றுச் சேவை செய்யுமாறு கூறினேன். "10 பிரதிகளை விற்றாலே பலன் இருக்கும்'' என்றேன். மூன்று பிரதிகளை விற்றவுடனேயே அவருக்கு நல்லதொரு வேலை கிடைத்துவிட்டது. வேலை கிடைக்க வேண்டியே புத்தக விற்பனையாகிய சேவையை அவர் ஏற்றுக்கொண்டார். 'விற்பது எத்தனை சிரமம்?' என்பதை எடுத்த எடுப்பிலேயே அவர் புரிந்துகொண்டார். பொழுதைப் போக்குவதற்காகவே படிக்கும் பழக்கம் உடையவர்களுக்கு மத்தியில், தெய்வம், சத்தியம், ஒழுங்கு என்று அறநெறி வகுப்பு நடத்தும் நல்ல நூல்கள் எப்படி விற்பனையாகும்? அவர் புத்தகத்தை நீட்டினாலே எல்லாரும் ஓட ஆரம்பித்து விடுகிறார்கள். இருந்தாலும் அவர் முயற்சியை விடவில்லை. தோல்வியிலும் துவளாத அவருடைய முயற்சி அற்புதமானது. 'வேலை கிடைக்க வேண்டும்' என்பதற்காக சேவையை மேற்கொண்ட அவர், பிறகு வேலையையே மறந்துவிட்டு, புத்தக விற்பனையில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டார். அவருடைய ஈடுபாடு புனிதமானது. அதன் காரணமாக அவருக்கு விரைவிலேயே ஒரு வேலை கிடைத்துவிட்டது. எனினும், சேவையை அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் நூற்றுக்கும் அதிகமான பிரதிகளை விற்று மகிழ்ந்தார்.

பலன் கருதித்தான் அவர் சேவையைத் தொடங்கினார் என்றாலும், பலன் கருதாது செய்தார். அது பவித்திரமான சேவையாகின்றது. அதனுடன் உயர்ந்த முயற்சியும் சேர்ந்து



கொள்கின்றது. சேவையும், முயற்சியும் உள்ள இடத்தில் ஆர்வம் தானாக வருகின்றது. இவற்றில் ஒன்று இருந்தாலும் அன்னையால் விரைந்து செயல்பட முடியும். அந்த இளைஞரிடம் அத்தனையும் சேர்ந்து அமைந்திருந்தன.

ஒரு கோடி ரூபாயை இழந்து திவாலான அமெரிக்கர் ஒருவர், அன்னைக்குக் காணிக்கை செலுத்தி, இழந்ததைப் போல இரண்டரை மடங்கு பெற்றார். அவருக்கு ஆரம்பத்தில் அன்னையின் மீது நம்பிக்கை இல்லை. அதோடு அவருடைய தம்பி தியானமையத்தில் சேர்ந்துவிட்டதால், அவருக்கு மையத்தின் மீது வெறுப்பு. அப்படிப்பட்டவர் விஷயத்தில் எப்படி அன்னையின் அருள் பேரளவில் விரைந்து செயல்பட முடிந்தது?

ஆற்று வெள்ளத்தில் சிக்கிக்கொண்டவன் எதையாவது பற்றிக்கொண்டு கரை சேரத் துடிப்பான். அதே போல அந்த அமெரிக்கருக்கும், 'எதையாவது பற்றிக்கொண்டு கஷ்டத்திலிருந்து கரை சேர்ந்தால் போதும்' என்ற நிலை. அன்னையின் அருள் தம்மைக் கரை சேர்க்கும் என்று நம்பத் தொடங்கினார். 'அன்னைக்குக் காணிக்கையாக 10 டாலர்களை அனுப்புங்கள்' என்று எழுதினால், 20 டாலர் அனுப்பினார். 'நீங்கள் குறித்து அனுப்பிய எல்லா வழி முறைகளையும் முழுமையாகப் பின்பற்றுகிறேன்' என்று எழுதினார்.

வாதப் பிரதிவாதங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், இது பெரிய மன மாற்றம். மனத்தை மாற்ற எடுக்கும் முயற்சி, மனித வாழ்வில் பெரு முயற்சி. அது ஓயாது உழலும் உணர்வால் செய்யும் முயற்சி என்பதால், உடலால் செய்யும் உழைப்பைவிட உயர்ந்தது. அந்த அமெரிக்கர் சொல்லியவண்ணம் செய்தார். சுத்தம், ஒழுங்கு, தணிந்த பேச்சு, நிதானம் போன்ற அன்னையின் எல்லா முறைகளையும் அவரும், அவர் மனைவியும், அவருடைய இரு குழந்தைகளும் கடைப்பிடித்தார்கள். அன்னையை முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள்.

அவருடைய பெற்றோர் மிகவும் பிடிவாதக்காரர்கள். மையத்தில் இருந்த தம் இளைய மகனைப் பார்க்க வந்துவிட்டு அமெரிக்கா திரும்பியபொழுதெல்லாம் தந்தைக்கு 40 இலட்சம், 4 கோடி என்றெல்லாம் வர இருந்த சமயங்களிலும், 30 கோடிக்கு ஒரு மிகப்பெரிய ஆர்டர் கிடைத்த சமயத்திலும், ''அன்னைக்கு காணிக்கை அனுப்புங்கள்'' என்று அவருடைய இளைய மகன் வேண்ட, ''எனக்கு வருவதெல்லாம் என் உழைப்பால் வருகிறதே தவிர, அன்னையால் வரவில்லை'' என்று காணிக்கை அனுப்ப மறுக்க, வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போனதுபோல, வர வேண்டிய பெரிய பணத்துடன், இருந்த பணமும் சேர்ந்து போக, 'அன்னை காப்பாற்றினால்தான் உண்டு' என்ற நம்பிக்கையும், சரணாகதியும் ஊற்றுக்கண் போலப் பெருக, மனத்தை மாற்றிக் கொண்டு, தம் பெரிய மகனோடு சேர்ந்து, தம் பங்காக 100 டாலரை அன்னைக்குக் காணிக்கையாக அனுப்பினார்.

அவர் முன்னால் செய்தது பிடிவாதம்; பின்னால் செய்தது சரணாகதி. பிடிவாதத்தை விட்டது சிறந்த மனப்பான்மை. தாய், தந்தை, மகன், மருமகள், பேரக் குழந்தைகள் என்று குடும்பத்தோடு அன்னையைச் சரணாகதி அடைந்தது மிகப்பெரிய மாற்றம். இவ்வாறு குடும்பத்தினர் அனைவரும் ஏற்றுக்கொள்வதால் ஏற்படும் பலனை, செய்து பார்த்தால்தான் உணர முடியும். மேலும் அவர்கள் அன்னையை மட்டுமே வழிபடவும் முடிவு செய்தனர். அதன் காரணமாகத்தான் அன்னையால் பூரணமாகவும், விரைவாகவும் செயல்பட முடிந்தது.

70 வயதுக்கும் மேலான வீர சைவப் பிரம்மச்சாரியான ஒருவர் நீரூற்றுக் கண்டுபிடிப்பு நிபுணர். அன்னையின் பக்தரான பின்பு, தாமே வலிய முன் வந்து ஆரோவில் நகரில் 18 இடங்களில் நீரூற்றைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டு அன்னையைத் தரிசிக்க வந்தார். அப்பொழுது அவர், ''காணிக்கை தேவையில்லை; ஆசீர்வாதம் மட்டுமே வேண்டும்'' என்று



கூறிவிட்டுக் கடலூருக்குத் திரும்பினார். பிறகு ஒரு வருடத்திற்குள் அவருடைய தொழில் 30 ஆண்டுகளில் செய்த அளவுக்குப் பெருகியது. ஆனால் வருமானம் மட்டும் பெருகவில்லை. எல்லாம் நிலுவையாக நின்றன. அவர் அதை என்னிடம் கூறி வருத்தப்பட்டார். அப்பொழுது நான், ''நீங்கள் 'அன்னைக்குக் காணிக்கை தேவை இல்லை; ஆசீர்வாதம் மட்டும் போதும்' என்றீர்கள். அதனால் உங்களுக்கு அன்னையின் ஆசீர்வாதம் கிடைத்தது. அதனால் தொழில் பெருகியது. செய்த தொழிலில் பணமும் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் அன்னைக்குக் காணிக்கையும் செலுத்தி இருக்க வேண்டும்'' என்றேன்.

அவர் தம் தவற்றை உணர்ந்தார். மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் மட்டுமே செலவிட்டு வாழ்க்கையைச் சிக்கனமாக ஓட்டிக்கொண்டிருந்த அவர், நூறு ரூபாயைக் காணிக்கையாக அனுப்பினார். அவருக்கு வர வேண்டிய பெருந் தொகை முழுவதும் உடனே வந்துவிட்டது. ஏதோ மந்திர சக்தியைப் போல அது வேலை செய்தது. அந்தப் பெருமாற்றம் எப்படி நிகழ்ந்தது?

ஒரு நீரூற்றைக் கண்டுபிடிக்க ரூ.50 வாங்கும் அவர், அன்னையின் நகரான ஆரோவில்லுக்குச் சேவையாக 18 நீரூற்றுகளைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். இது மாபெருஞ்சேவை. யாராலும் தூண்டப்படாமல் தாமே முன்வந்து அந்தச் சேவையைச் செய்தார். அந்தச் சேவைக்குப் பெரும்பலன் உண்டு. அன்னையை முதன்முதலில் தரிசிக்க வந்தபொழுது, ''இங்கே என்ன முறை?'' என்று கேட்டார். ''ஆத்மீகப் பலனுக்கு மலரும், வாழ்க்கை வளத்திற்குக் காணிக்கையும் செலுத்துவது முறை'' என்றேன்.

''காணிக்கை தேவை இல்லை'' என்று கூறிவிட்டு, அன்னைக்கு மலர்ச் சமர்ப்பணம் செய்துவிட்டுத் திரும்பிய அவர் முகத்தில் தெய்வீக தேஜஸ் ஜ்வலித்தது. கடுமையான அவர் குரல் கடுமையை இழந்திருந்தது. படபடப்பான அவர் சுபாவம்

பதப்பட்டிருந்தது. அமைதியை அறியாத அவர் மனம் அமைதியால் சூழப்பட்டது. அன்னையை வாரந்தோறும் வந்து வழிபட்டார். அவர் சமர்ப்பித்த மலர்க் காணிக்கை ஆத்மாவை மலரச் செய்தது. ஒவ்வொரு முறையும் அன்னையைத் தரிசித்த பிறகு ஆர்டர்கள் வந்து குவிந்தன. ஆனால் பணம் மட்டும் வரப் பல்லாயிரம் தடைகள் இருந்தன. அவருடைய குறையை எடுத்துக் காட்டியவுடன் மனத்தை மாற்றிக்கொண்டார். 'நான் பேசினால் மற்றவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, எதிர்த்துப் பேசக்கூடாது' என்ற சுபாவம் உள்ள அவர், மனத்தை மாற்றிக்கொண்டது பெரிய விஷயம். தம் சேவையாலும், பிரம்மச்சரியத்தாலும், தரிசனத்தாலும் விளக்கம் பெற்றவர், குதர்க்கப் புத்தியால் 'காணிக்கை தேவையில்லை' என்றார். சேவையின் காரணமாகத் தொழில் பெருகியது. அவர் சொல் பலித்தது. ஆனால் பணம் வர மறுத்தது. அதற்குத் தன் புத்தி தடையாக இருந்ததை உணர்ந்து மாறினார். சேவையுடன் கூடிய மனம் பிரவாகமாக வந்தது. சேவைக்கு மகத்துவம் உண்டு; காணிக்கைக்குப் பொருள் உண்டு.

ஒரு பெரிய நிறுவனத்தின் உரிமையாளரைச் சந்தித்து, அந்நிறுவனத்தின் வளர்ச்சி குறித்துப் பேசினார் என் நண்பர். அது நம் நாட்டின் மிகப்புகழ் பெற்ற நிறுவனம். அது 400 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வரவு-செலவு செய்யக்கூடியது. அந்நிறுவனத்தின் உரிமையாளரை 'Businessman of the year' என்று அந்த வருடம் தேர்ந்தெடுத்திருந்தனர். அந்நிறுவனத்தை எப்படி மேலும் சிறப்புறச் செய்யலாம் என்பது பற்றி என் நண்பர் விளக்கியதைக் கவனமாகக் கேட்ட பிறகு, "நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை. இங்குள்ள நிலவரத்தை நேரில் பார்க்காமலே உங்களால் எப்படி இவ்வளவு தெளிவாகச் சொல்ல முடிகிறது?" என்று வியந்த உரிமையாளர், "எங்கள் நிறுவனத்தை study செய்து ஒரு ரிப்போர்ட் கொடுத்து உதவுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.



நண்பரும், நானும் சேர்ந்து ரிப்போர்ட் தயார் செய்தோம். ரிப்போர்ட்டில் குறிக்கப்பட்ட அத்தனை யோசனைகளும் அன்னையின் முறையை அடிப்படையாகக் கொண்டவை. பொதுவாக அன்னையின் முறைகளை முழுமையாகப் பின்பற்றினால், 12 மாதங்களில் வருமானம் இரண்டு மடங்காகப் பெருகும். 'சிறப்பாக அவற்றைப் பின்பற்றினால் ஒவ்வோர் ஆண்டும் வருமானம் இரட்டிப்பாகக் கூடும்' என்பது எங்கள் அனுபவம். 'அவையெல்லாம் அந்த மிகப்பெரிய நிறுவனத்திற்குப் பொருந்துமா?' என்ற ஐயமும் கூடவே எழுந்தது. அதனால் எங்கள் ரிப்போர்ட்டில் அதை வலியுறுத்திக் குறிப்பிடாமல், பொதுவான 4 கருத்துகளையும், குறிப்பாக 120 யோசனைகளையும் மட்டுமே தெரிவித்திருந்தோம்.

உரிமையாளர் ரிப்போர்ட்டைப் பெரிதும் விரும்பினார். 'ரிப்போர்ட்டில் காணப்படும் யோசனைகளைப் பின்பற்றினால் நல்ல பலன் கிடைக்கும்' என்று ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த நிறுவனத்தின் வருடாந்திரக் கணக்கை ஒவ்வோர் ஆண்டும் ஜூனில் முடிப்பார்கள். நாங்கள் ரிப்போர்ட் கொடுத்த ஓராண்டுக்குப் பிறகு ஜூன் மாதம் வரவு-செலவுக் கணக்கை எடுத்துப் பார்த்தார்கள். வரவு-செலவு 440 கோடியிலிருந்து 600 கோடியைத் தாண்டிவிட்டிருந்தது. நிகர லாபம் 20 கோடியிலிருந்து 60 கோடியாக உயர்ந்துவிட்டது. இரு மடங்குகளுக்கும் மேலான பலனை அளித்தது அன்னை முறை. அதற்குக் காரணம் என்ன?

அந்த நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்கள் தரத்திற்குப் பெயர் போனவை. உற்பத்தி செய்யும் இடத்தில் காணப்படும் சுறுசுறுப்பு வியப்புக்குரியது. அதன் உரிமையாளர் அமெரிக்க ஹார்வர்டு பல்கலைக்கழகப் பட்டதாரி. ஏராளமான சிஸ்டங்களைக் கையாள்கின்றார். மேலும் புதிய முறைகள் இருந்தால், அவற்றை ஆர்வத்துடன் பின்பற்றத் தயாராக இருக்கின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக அவார்டு வாங்கிய பிறகும் மற்றவர்களிடமிருந்து புதியனவற்றைக் கற்றுக்கொள்ள விழையும்

மனப்பான்மை இருக்கின்றது. அது அடக்கத்தின் சிகரம் போன்றது. தரம், இலட்சியம், system, சுறுசுறுப்பு, அடக்கம் போன்ற உயர்ந்த அம்சங்கள், அன்னையின் சக்தி பெரிய அளவில் செயல்படத் துணையாக நின்றன.

'சத்தியம்' என்பது அஞ்ஞானக் கலப்பு இல்லாமல் உறையும் உலகம் (Supramental world). தெய்வலோகத்திற்கும் மேலேயுள்ள உலகம் 'விஞ்ஞான லோகம்' எனப்படும். அந்த உலகத்தின் சக்தியை அன்னை நம் வாழ்வில் செயல்படச் செய்கின்றார். அதன் விளைவுகள் அற்ப, சொற்பமாக இரா. பெரிய மாற்றங்களாகவும், ஏற்றங்களாகவும் இருக்கும் என்பதை, மேற்கூறிய சான்றுகள் தெளிவாகச் சொல்கின்றன.

உலகத்திற்குப் புதிதாகக் கிடைத்துள்ள தெய்வீகச் சக்தி அது. உலகம் பொய்ம்மையால் நிறைந்ததானாலும், அதன் ஆத்மீக அடிப்படையான சத்தியத்தையும், அதன் வடிவங்களான விசுவாசம், நம்பிக்கை, முயற்சி, விடா முயற்சி, தெய்வ நம்பிக்கை, பக்தியுடன் கூடிய ஆர்வம், நேர்மை, அடக்கம் போன்ற அம்சங்களையும் கடைப்பிடித்தால், அன்னையின் சக்தி நம் வாழ்வில் சிறப்பாக வெளிப்பட முடியும்.

இந்தப் பெரிய இலட்சியங்களை நடைமுறை வாழ்வில் நாம் எந்த உருவில் சந்திக்கின்றோம்? அவற்றுக்கு மாறானவை எவை? அறிவால் செயல்படுபவன் வாழ்வில் காணும் அம்சங்கள் என்ன? உடல் உழைப்பு நிறைந்த இடத்தில் என்ன காணப்படுகின்றது? மற்றவர்களுடன் பழகும்பொழுது இந்தத் தெய்வீகச் சத்தியம் எந்த உருவில் நம்முள் வருகின்றது? - இவைதாம் ஓர் எளிய மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய அம்சங்கள். ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் எழுதியுள்ளவற்றிலிருந்து தொகுத்து மனம், வாழ்வு, உடலுக்குப் பொருத்தமான சத்திய வடிவங்களையும், அவற்றை ஒட்டிய அடைப்புக்குள் அவற்றிற்கு எதிரான பொய்யின் உருவங்களையும் கீழே தருகின்றேன்.



**உழைப்பு நிறைந்த வாழ்வில் காணப்படுபவை:** (1) சுறுசுறுப்பு (சோம்பேறித்தனம்), (2) தூய்மை (அழுக்கு), (3) அமைதி (மந்தம்), (4) நம்பிக்கை (சந்தேகம்), (5) உழைப்புக்கு வேண்டிய சக்தி (உறக்கம்), (6) ஒழுங்கு முறை (ஒழுங்கீனம்), (7) நேரத்தோடு செயல்படுதல் (கால தாமதம்), (8) அறிவு (மடமை), (9) செயலின் தெளிவு (குழப்பம்), (10) மற்றவரை அனுசரித்தல் (பிடிவாதம்), (11) மாற்றிக்கொள்ள முன்வருதல் (மாற்றத்தை மறுக்கும் குணம்), (12) பெருந்தன்மை (இழிகுணம்), (13) முறைகள் - systems (திட்டமின்றிச் செயல்படுதல்).

**வாழ்வில் முக்கியமான அம்சங்கள்:** (1) தன்னலமற்ற தன்மை (சுயநலம்), (2) அடக்கம் (கர்வம்), (3) பொறுமை (கோபம்), (4) அவா அடக்குதல் (பேராசை), (5) நிதானம் (வேகம்), (6) நல்லுணர்வு (கிளர்ச்சி), (7) தாமாக வருவனவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ளுதல் (வலிந்து கேட்டுப் பெறுவது), (8) பணிவு (செருக்கு), (9) இனிமையாகப் பழகுதல் (பிறர் மனத்தைப் புண்படுத்துதல்), (10) மகிழ்ச்சி (சலிப்பு, விரக்தி), (11) நல்ல எண்ணம் (கெட்ட எண்ணம்).

**அறிவுக்குப் பொருத்தமானவை:** (1) பிறர் நோக்கைப் புரிந்துகொள்ள முயல்வது (தன் கருத்தை வலியுறுத்துவது), (2) அறிவில் தெளிவு (மனக் குழப்பம்), (3) உயர்ந்த புத்தி (மந்த புத்தி), (4) புதிய கருத்தை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பான்மை (குறுகிய நோக்கம்), (5) நினைவாற்றல் (மறதி), (6) சீரிய சிந்தனை (சிறிய சிந்தனை).

பொய்களை விலக்கும்போது மனத்தின் இருள் மறைகின்றது; சத்தியத்தின் வெளிச்சம் பரவுகின்றது. இந்த வெளிச்சமே அன்னையின் அருள் வெளிப்பாட்டுக்கு வைகறையாக அமைகின்றது.

*தொடரும்....*

❋❋❋

# "உன் திருவுள்ளம்....."

விசாலம்

அனலாய் கொதித்தது பூரணிக்கு. முனகியவாறே படுத்திருந்த அவளை, அவளுடைய அம்மா தொட்டு எழுப்ப வந்தாள். பகீரென்றது. "என்ன இப்படிக் கொதிக்கிறதே உடம்பு! பூரணி, பூரணி, என்னம்மா ஆச்சு? நாளை மறுநாள் கடைசி பரீட்சை ஆச்சே, என்ன செய்வது?" என்றவாறே கவலையுடன் அவள் அருகில் அமர்ந்தார். முனகியவாறே எழுந்த பூரணி, "சுத்தமா ஒன்றும் முடியலம்மா, உட்காரகூட முடியல, என்ன செய்யப்போறேன், தெரியல. கஷ்டப்பட்டு மூன்று வருடங்கள் படித்து இப்படி கடைசி பரீட்சை எழுதாமல் கோட்டை விடப் போறேனா, தெரியல". அழுகைதான் வந்தது பூரணிக்கு.

"சரி அழாதே. அழுதால் உடம்பு ஜாஸ்திதான் ஆகும். அப்பா ஆபீஸிலிருந்து வரட்டும். டாக்டரிடம் போய்விட்டு வந்துவிடலாம்" என்றவாறு அம்மா அன்னை முன் அமர்ந்துவிட்டார்.

பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த பூரணி ஓரளவு நன்றாகப் படிக்கும் மாணவி. மூன்றாவது வருடம் இறுதியாண்டு. பரீட்சைகள் ஆரம்பித்துவிட்டன. முதல் நான்கு நாட்கள் உற்சாகமாக எழுதிவிட்டாள். ஐந்தாவது நாள் பரீட்சைக்கு கிளம்பும்போது தலைவலி, உடல் அசதி இருந்தது. ஒரு குரோஸின் மாத்திரையை சாப்பிட்டுவிட்டு கிளம்பிவிட்டாள். ஏதோ பரீட்சை பயம், அதனால் உடம்பு அசதியாக இருக்கிறது என்று நினைத்தவளுக்கு தொடர்ந்து ஜுரம் வருவதும் போவதுமாக இருந்தது. மாத்திரை சாப்பிட்டால் ஜுரம் குறையும், எழுந்து உட்கார்ந்து படிப்பாள். இரவு ஜுரம் அடிக்கும். மீண்டும் ஒரு மாத்திரை, இப்படியாக எல்லா தேர்வையும் எழுதி முடித்துவிட்டாள். ஒரே ஒரு தேர்வு physics practical மாத்திரம் பாக்கி இருந்தது.



அப்பொழுதுதான் உடம்பு தகிக்க ஆரம்பித்தது. "அன்னையே காப்பாற்று, காப்பாற்று" என்றவாறே படுத்திருந்தாள். பூரணியின் அப்பா வந்தவுடன் டாக்டரிடம் அழைத்துச் சென்றார். எல்லா சோதனைகளும் முடிந்தன. "typhoid" என்றார் டாக்டர்.

''ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளுங்கள். ரொம்ப தீவிரமாக இருக்கிறது, bed rest எடுத்துக் கொள்ளட்டும். எங்கும் அலைய வேண்டாம்" என்றார்.

"டாக்டர், இன்னும் ஒரே ஒரு examதான் பாக்கியிருக்கிறது. மூன்று வருட உழைப்பு வீணாகிவிடுமே. எப்படியாவது எனக்கு ஜுரத்தை குறைத்து, தேர்வு எழுதும் அளவுக்குச் சரி செய்து விடுங்கள்" என்று கெஞ்சினாள் பூரணி.

"என்னம்மா விளையாடுகிறாயா? உடம்பு முக்கியமா, தேர்வு முக்கியமா? இப்பொழுது எழுதவில்லை என்றால் என்ன? வரும் Septemberல் எழுதிவிடு, அவ்வளவுதானே".

வீட்டிற்குத் திரும்பிய பூரணிக்கு தலைவலிதான் அதிகமாயிற்று. September மாதம் தேர்வு எழுதினால் வெறும் Completion Certificateதான் கிடைக்கும். என்னதான் இருந்தாலும் அதற்கு மதிப்பு ஒரு மாற்று கம்மிதான். "அன்னையே ஏதாவது வழி காட்டேன். எனக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதைச் செய். என்ன முடிவு எடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நீ என்ன முடிவு எடுக்கிறாயோ அதை ஏற்றுக் கொள்கிறேன். அன்னையே உன் திருவுள்ளப்படி நடக்கட்டும்" என்று சொல்ல ஆரம்பித்தாள் பூரணி.

''ஏம்மா, நம்ப நீலா, கலைக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக இருக்கிறாளே, அவளைப் போய் பார்த்து என்ன விதிமுறைகள், என்ன செய்வது, இப்ப எழுதாமல் உடல் நிலைக் காரணமாக Septemberல் எழுதினால் எப்படி கணக்கில் எடுத்துக் கொள்வார்கள் என கேட்டுவிட்டு வருகிறேன். ஸ்ரீராமும் நிர்வாகப் பொறுப்பில்தானே இருக்கிறார். அவருக்கு ஏதாவது விஷயம்

தெரிகிறதா என பார்த்துவிட்டு வருகிறேன். நீ கவலைப்படாமல் ஓய்வு எடுத்துக்கொள்" என்று பூரணியின் அப்பா காலில் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பிவிட்டார்.

நீலா அத்தை சாதகமாக ஏதாவது பதில் கூறினால் தேவலை என யோசித்தவாறே பூரணி அயர்ந்து தூங்கிவிட்டாள்.

"பூரணி, பூரணி, எழுந்திரும்மா. அன்னையின் கருணையைப் பார்! அன்னை உன்னைக் கைவிடவில்லை".

"என்னப்பா! என்ன நடந்தது?"

"சொல்கிறேன், கேள்".

"நீலா, பூரணிக்கு typhoid. நாளைக்கு physics practical exam இருக்கு. அவளால் மூன்று மணி நேரம் நின்று கொண்டு practicals செய்ய முடியாது. Septemberல் எழுதினால் பரவாயில்லையா? என்ன விதிமுறைகள் என்று எனக்குத் தெரியவில்லை. மிகவும் கவலைப்படுகிறாள்".

"அண்ணா, இதைப் பற்றி என்னைவிட ஸ்ரீராமிற்கு அதிகம் தெரியும். அவர் நிர்வாகப் பிரிவில் இருப்பதால் rules எல்லாம் அத்துப்படி" என்றவாறே "ஸ்ரீராம் இங்க கொஞ்சம் வருகிறீர்களா, அண்ணா வந்திருக்கிறார், பாருங்கள்" என்று தன் கணவரை அழைத்தாள்.

"அடேடே, வாங்க, வாங்க. நான் ஏதோ accounts பார்த்துக் கொண்டிருந்தேன், கவனிக்கவில்லை. என்ன விஷயம், சொல்லுங்கள்".

விஷயத்தை விலாவாரியாக மீண்டும் ஒரு முறை கூறலானார் பூரணியின் அப்பா.

"என்ன practicals, நாளைக்கு".

"Physics practicals".

"சரி, கீழே குவார்ட்டர்ஸில் physics lecturer திரு. கோபால் இருக்கிறார். அவரையே கேட்கலாம், வாருங்கள்".



ஸ்ரீராமும், பூரணியின் அப்பாவும் கீழே அந்த விரிவுரையாளரைச் சந்திக்கச் சென்றனர். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட அவர்,

"உங்கள் பெண் எந்த collegeல் படிக்கிறாள்? எங்கு exam எழுதப்போகிறாள்?"

"மகளிர் கல்லூரியில் படிக்கிறாள். அங்குதான் தேர்வும் நடக்கப் போகிறது".

"அடேடே, நான்தான் அந்தக் கல்லூரிக்கு கண்காணிப்பாளராகப் போகிறேன். கவலையை விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். உங்கள் பெண்ணை பத்திரமாக ஒரு வண்டி ஏற்பாடு செய்து அதில் அழைத்து வாருங்கள். டாக்டர் சான்றிதழுடன் உங்கள் கைப்பட 'இந்த மாதிரி எனது பெண்ணிற்கு உடல்நிலை சரியில்லாததால் அவளால் மூன்று மணி நேரம் தொடர்ந்து நின்று கொண்டு practicals செய்ய முடியாது' என எழுதி, ஒரு கடிதம் எனக்கு கொடுங்கள். அவள் வந்து என்ன experiment செய்ய வேண்டி வருகிறதோ அதற்கு செய்முறை விளக்கம் எழுதி, readings எடுத்துவிட்டு கிளம்பட்டும். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஓர் அரை மணி நேரம் நிற்பதற்குரிய தெம்பு அவளுக்கு இருந்தால் போதும். Horlicks கொடுத்து அனுப்புங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன், கவலைப்பட வேண்டாம் என்று உங்கள் பெண்ணிடம் சொல்லுங்கள்".

இதை அப்பா சொல்லிக் கேட்ட பூரணிக்கு விழிகளில் தாரைதாரையாக கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது.

"அன்னையே தாயினும் சாலப்பரிந்து எனக்கு அருள் புரிந்திருக்கிறாய். நீயே கதி என்ற எனக்கு வழி காண்பித்திருக்கிறாய். நன்றிம்மா, நன்றி" என்று கூறியவண்ணம் நிம்மதியாக தூங்கலானாள்.

மறுநாள் காலை வீட்டில் ஒரே தடபுடல்தான். அம்மா ஒரு பக்கம் horlicks கரைத்து பிளாஸ்க்கில் நிரப்பிக் கொண்டிருக்க,

அப்பா ஒரு புறம் பூரணிக்குத் தேவையானதை எடுத்து வைத்துக் கொண்டிருக்க, தம்பி ஒரு பக்கம் taxi கொண்டுவர கிளம்பிக் கொண்டிருக்க, துணைக்கு நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு சகோதர, சகோதரிகள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

அக்கா, தம்பி, தங்கை என்று இவர்கள் புடைசூழ, பிக்னிக்குக்கு கிளம்புவது போல் பூரணி தேர்வுக்குத் தயாரானாள். அந்த உடம்பிலும், காரில் பரீட்சைக்கு கிளம்பிய பூரணிக்கு, கார் சவாரி பெருமையாக இருந்தது. காரில் வந்திறங்கிய பூரணியைப் பார்த்து நண்பர்களுக்கு ஒரே குழப்பம். விஷயம் தெரிந்தவுடன் எல்லோரும் அவளுக்கு ஆறுதல் கூறி உற்சாகப்படுத்தினர். எல்லோருடைய நல்லெண்ணம் அவளுக்கு புதிய தெம்பினை அளித்தது.

தனக்கு வந்த Tanjent Galvanometer பரிசோதனையின் செய்முறை விளக்கம் எழுதி, readings எடுத்துவிட்டு, பேப்பரை மடித்து கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள் பூரணி.

இரண்டு மாதங்கள் கழிந்தன. “ஸார் போஸ்ட்”. பூரணியின் பெயருக்கு வந்த கடிதத்தைப் பிரித்த பூரணியின் அப்பா,

‘‘அம்மா பூரணி, வாழ்த்துகள். நீ 1st classல் பாஸ் செய்திருக்கிறாய், அதுவும் உன் வகுப்பில் முதல் மாணவியாய்”.

அன்னையின் அறைக்கு ஓடிய பூரணி, அன்னைக்கு நெக்குருக நன்றி கூறினாள்.

*முற்றும்.*

❋❋❋



# நம்முடைய Higher Selfஐ மதித்து நடத்தல்

N. அசோகன்

உலகத்தில் உள்ள எண்ணற்ற சாதாரண மக்களிடைய ஒரு உயர்ந்த ஆன்மீக அம்சம் கொண்ட Higher Self இருக்கின்ற மனிதர்களே மிகவும் குறைவு. இங்கும் அங்குமாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் இருப்பார்கள். பகவான் மற்றும் அன்னையைத் தேடி இப்போது ஏராளமானவர்கள் வந்து விட்டார்கள். இப்படிப்பட்ட அன்பர் வட்டாரத்தில் ஒரு organised Higher Self உள்ளவர்கள் வெளியுலகத்தில் இருப்பதைவிட எண்ணிக்கையில் அதிகமாக இருக்கலாம். வெளியுலகத்தில் இலட்சம் சாதாரண மனிதர்களிடையே ஏதோ நூறு பேர்களிடம் தான் Higher Self இருக்கும் என்றால் இலட்சம் அன்னை அன்பர்களை எடுத்துக் கொண்டால் அவர்களிடையே ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பேருக்காவது இப்படி ஒரு உயர்ந்த அம்சம் இருக்கும். சிலரிடம் இப்படி ஒரு உயர்ந்த அம்சம் இருக்கிறது என்றாலும் அதை அவர்களே உணர்ந்து தெரிந்து வைத்துக் கொண்டு பாராட்டிக் கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. அது இருப்பதே தெரியாமல் மற்றவர்களைப் போல தன்னையும் ஒரு சாதாரண பர்சனாலிட்டி உள்ளவராக நினைத்துக் கொள்ளலாம். உதாரணமாக சுவாமி விவேகானந்தருக்கு ஒரு உயர்ந்த ஆன்மீக அம்சம் இருந்தது அவருக்கே தெரியாது. அவர் ஒரு சாதாரண கல்லூரி மாணவனாகத் தன்னை பாவித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தார். பரமஹம்சர் அவர்களுக்குத்தான் இவரிடம் உயர்ந்த ஆன்மீக அம்சம் இருக்கிறது என்று புரிந்தது. அப்போதெல்லாம் சுவாமி விவேகானந்தருக்கு நரேன் என்று தான் பெயர். ‘‘நரேன்!

உன்னிடம் ஒரு உயர்ந்த ஆன்மீக அம்சம் உள்ளது. அது வீணாகக் கூடாது. அதனால் தினமும் என்னை வந்து பார்'' என்று அறிவுறுத்துவாராம். அவர் சொல்வது ஒன்றும் புரியாமல் பரமஹம்சரை விவேகானந்தர் பார்க்காமல் தவிர்த்த நாட்களும் உண்டு. ஆகவே சுவாமி விவேகானந்தருடைய விழிப்புணர்வே இந்த நிலையில்தான் இருந்தது என்றால் மற்றவர்களுடைய விழிப்புணர்வைப் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட சம்பவத்தை வைத்துப் பார்க்கும்போது இப்படிப்பட்ட உயர்ந்த அம்சம் ஒருவருக்கு இருக்கிறது என்று பொதுவாக எப்படித் தெரிய வரும் என்றால் அநேகமாக இப்படி ஒரு குரு அவருக்கு அமைந்து அவர் இவரிடம், ''உன்னுடைய பர்சனாலிட்டிக்கு ஒரு உயர்ந்த அம்சம் இருக்கிறது. அதைப் பாராட்டிக் கொள், விட்டு விடாதே'' என்று சொல்லும்போது தான் அவருக்கே தனக்கு Higher Self இருப்பதாகத் தெரிய வரும். உதாரணமாக என் தகப்பனார் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் எண்ணற்ற அன்னை பக்தர்களைச் சந்தித்துள்ளார். அப்படி வந்தவர்களில் ஒரு சில பேரிடம் இப்படி ஒரு Higher Self இருப்பதை அவர் பார்த்திருக்கிறார். அவர்களிடமெல்லாம், ''உங்களிடம் இப்படி ஒரு Higher Self இருக்கிறது. அதைப் பாராட்டிக் கொள்வது நல்லது'' என்று அவர் சுட்டிக்காட்டி இருக்கலாம். அப்படி சுட்டிக்காட்டப்பட்டவர்களில் யார் அவர் சொன்னதை நம்பினார்கள், யார் நம்பவில்லை, யார் அதை வளர்த்துக் கொண்டார்கள், யார் அதை வளர்த்துக் கொள்ளாமல் ''சாதாரணமாக இருந்தாலே போதும், பெரிய ஆன்மீக வளர்ச்சி எல்லாம் தேவையில்லை'' என்று விட்டு விட்டார்கள் என்று நமக்குத் தகவல் தெரியாது. ஏதோ ஒரு சிலராவது அவர் சொன்னதை நம்பிப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள் என்று நாம் யூகம் செய்து கொள்ளலாம். ஆகவே சொந்தமாகவோ அல்லது இப்படி ஒரு குருநாதர் மூலமாகவோ Higher Self பற்றி இப்படி



ஒரு விழிப்பு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எந்த வழியாகத் தனக்கு விழிப்புணர்வு வந்தாலும் தன்னிடம் Higher Self இருக்கிறது என்று புரிந்த மாத்திரத்தில் கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு வைரக் கல்லை அதன் உரிமையாளர் எப்படிப் பத்திரமாக பாதுகாக்கிறாரோ, அப்படித் தன்னுடைய Higher Selfஐ பாதுகாத்துக் கொள்ள அந்த அன்னை அன்பர் முன்வர வேண்டும்.

தன்னுடைய Higher Selfஐ பாதுகாத்துக் கொள்வதோ மற்றும் அதனுடைய விதிமுறைகள் மற்றும் நியதிகளின்படி வாழ்வதோ அவசியம் என்று ஒரு அன்பர் உணரலாம், மற்றும் முன்வரலாம். அவரைச் சுற்றி இருப்பவர்கள் மற்றும் அவரோடு உறவாடுகின்றவர்கள் எல்லோரிடமும் இப்படி ஒரு Higher Self இருந்து அவர்களும் அதை மதித்து நடப்பவர்களாக இருந்தால் தன்னுடைய Higher Selfஐ பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்ற அன்பருக்கு அது சிரமமாக இராது, சுலபமாகவே இருக்கும். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அப்படி அமைவதில்லை. பொதுவாக இப்படிப்பட்ட Higher Self உள்ளவர்களைச் சுற்றி இருப்பவர்கள் பெரும்பாலும் தம்முடைய lower selfஐ மையமாக வைத்து செயல்படுபவர்களாகத்தான் அமைகிறார்கள். இப்படி lower selfஐ மையமாக வைத்து செயல்படுகின்றவர்கள் சுயநலமிகளாகவும், குறுகிய மனப்பான்மை உள்ளவர்களாகவும், பேராசை பிடித்தவர்களாகவும், சின்னபுத்தி உள்ளவர்களாகவும், மட்டமானவர்களாவும், பொய் பேசுகின்றவர்களாகவும், அடுத்தவர்களை ஏய்ப்பவர்களாவும்தான் இருப்பார்கள். இவை போக இன்னும் வேண்டாத குணவிசேஷங்கள் பல இருக்கலாம். இப்படிப்பட்ட மனிதர்களோடு Higher Self உள்ளவர்கள் பழக வேண்டி இருந்தால் அவர்களை இப்படிப்பட்ட உறவு பல வகைகளில் பாதிக்கலாம். தன்னுடைய சந்தோஷத்தையும், உரிமைகளையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வ-

தற்காக இப்படிக் கீழ் நிலையில் உள்ளவர்களோடு சண்டை போட வேண்டி வரலாம். இத்தகைய சண்டை நாளடைவில் வெறும் ஈகோ கிளாஷ் ஆக மாறலாம். நிலைமை மோசமாகி அடிக்கடி ஈகோ கிளாஷ் அடுத்தவர்களுடன் நிகழ்ந்தால் நாளடைவில் Higher Self உள்ளவர்களும் lower selfஇல் உள்ளவர்களும் ஒன்றாக ஒரே ஸ்தாபனத்திலோ, குடும்பத்திலோ இருந்தாலும் எதிரிகளாக மாறி விடலாம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சந்திக்கின்ற Higher Selfஇல் உள்ளவர்கள் எப்படி நடந்து கொள்வது என்ற கேள்வி எழுகிறது. Lower selfஇல் உள்ளவர்களுடன் தகராறு செய்து தன்னுடைய சந்தோஷத்தையும், உரிமைகளையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்வதா? அல்லது தன்னை விட தாழ்ந்த நிலையில் உள்ள மற்றவர்களால் வருகின்ற பாதிப்பு வந்தால் வரட்டும், அதற்காக தன்னுடைய Higher Self நிலையில் இருந்து இறங்கி வர வேண்டாம் என்று முடிவு செய்வதா என்ற கேள்வி எழுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால் சண்டை போட்டு, தகராறு செய்து தான் உரிமைகளையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கும் நாம் தயாராக இருப்போம். அதுதான் சரியான அணுகுமுறை என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இந்த அணுகுமுறை தவறு என்பது தான் உண்மை. நம்முடைய வருமானம் மற்றும் உரிமைகளையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்ள நாம் நம்முடைய Higher Selfஐ புண்படுத்துவதோ மற்றும் அதை இம்சை செய்வதோ சரியில்லை. Lower selfஇல் உள்ளவர்களுடன் தகராறு செய்து Higher Selfஇல் உள்ளவர்கள் வெற்றி காணலாம். ஆனால் அதையே வாடிக்கையாக செய்வது என்று Higher Selfஇல் உள்ளவர்கள் ஆரம்பித்தால் அத்துடன் அவருடைய Higher Selfஇன் உடைய வளர்ச்சி நின்றுவிடும். ஒவ்வொரு முறை நாம் ஈகோ கிளாஷில் வெற்றி பெறும்போதும் நம்முடைய Higher



Selfன் உடைய வளர்ச்சி தடைபடுகிறது. மற்றும் தாமதிக்கப்படுகிறது. இது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால் நம்முடைய Higher Self நஷ்டம் அடைகிறது என்பது உண்மையில்லை என்றில்லை. அதற்கு வருகின்ற நஷ்டமும், பாதிப்பும் உண்மை தான். இது எப்படி இருக்கிறது என்றால் நமக்கு ஒருவரிடம் இருந்து வரவேண்டிய ஆயிரம் ரூபாயை வசூல் செய்வதற்காக கோர்ட்டில் வழக்குப் போட்டு, கோர்ட் செலவு மற்றும் வக்கீல் செலவு என்று இலட்ச ரூபாய் செலவு செய்வது போல இருக்கிறது. ஆயிரம் ரூபாய் வசூலிப்பதற்காக இலட்ச ரூபாய் வீண் செலவு செய்கின்றவர் மிகவும் அறிவில்லாத ஒரு வேலையை செய்கின்றார் என்று நமக்குத் தெரிகின்றது. பண விஷயத்தில் நஷ்டம் வரும்போது நமக்கு நிதர்சனமாகத் தெரிகின்ற உண்மை consciousness விஷயத்தில் நஷ்டம் வரும்போது அவ்வளவு தெளிவாகத் தெரிவதில்லை. இருந்தாலும் இந்த நஷ்டத்தையும் உணர்ந்து இத்தகைய அறிவில்லாத வேலைகளைச் செய்யாமல் நம்முடைய Higher Selfஇன் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அதனுடைய தேவைகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்வதுதான் நல்லது என்றாகிறது.

நம்முடைய Higher Selfஐ மதித்து நடக்க வேண்டும், மற்றும் அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் நாம் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்றால் அதனால் வரக்கூடிய பண நஷ்டம், பொருள் நஷ்டம், மான நஷ்டம் மற்றும் உரிமையை இழத்தல் என்று இப்படி வரக்கூடிய பலவிதமான நஷ்டங்களை எப்படி அனுமதிப்பது மற்றும் தாங்கிக் கொள்வது என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய உடைமைகளையும், உரிமைகளையும் பிடுங்கிக் கொண்டு, நம்மை அவமானப்படுத்தி, நம்மை ஒதுக்கி வைத்து, நம்மை ஏமாற்றி அதில் சந்தோஷம் காண விரும்புகின்ற மனசாட்சியில்லாத மற்றும் பேராசை பிடித்த, சுரண்டக்கூடிய எண்ணம் கொண்ட பொய்யான மற்றும் தவறான

மனிதர்களின் செயல்பாடுகளை எப்படி ஏற்றுக் கொள்வது? மற்றும் எப்படி இதற்கெல்லாம் இடம் கொடுப்பது? என்ற கேள்வி திரும்பத் திரும்ப வரத்தான் செய்யும். இந்த ஆபத்து மிகவும் நிஜமாகத் தெரியலாம். ஆனால் இதை சீரியஸாக எடுத்துக் கொண்டு நம் உடைமைகளையும், உரிமைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக lower selfஇல் செயல்படுகின்றவர்களோடு சண்டையில் இறங்க வேண்டும் என்று நாம் அவசரப்பட்டுவிடக் கூடாது. நமக்குள் இருக்கும் இந்த Higher Self என்பது ஒரு பெரிய கடல் போன்றது. கடலுக்குள் இறங்கி ஆயிரக்கணக்கானவர்கள் அந்த கடல் நீரை இரண்டு வாளி மற்றும் மூன்று வாளி அளவில் மொண்டு கொண்டு வீட்டிற்கு எடுத்துச் சென்றாலும் அந்தக் கடல் நீரின் மட்டம் ஒரு இன்ச் அளவிற்குக் கூட குறையாது. நம்முடைய Higher Self இப்படித்தான் இருக்கிறது. அதற்குள் இருக்கும் ஆன்மீக சக்தி என்பது அளவற்றது. கடலின் பரப்பு நம்முடைய பார்வைக்கு எவ்வளவு பிரம்மாண்டமாக இருக்கிறதோ அதே அளவிற்குச் சூட்சுமப் பார்வை உள்ளவர்களுக்கு Higher Selfஇல் காணப்படும் ஆன்மீக சக்தியின் அளவும் பிரம்மாண்டமாகத் தெரியும். Lower selfஇல் உள்ளவர்களால் நமக்கு வருகின்ற ஒவ்வொரு நஷ்டத்தையும் ஈடு செய்யும் வகையில் இழந்ததைவிட நூறு மடங்கு அதிகமாகவும், ஆயிரம் மடங்கு அதிகமாகவும் நம்முடைய Higher Selfஏ நாம் எதை இழந்தோமோ அதையே திருப்பித் தரும். பேராசை பிடித்த, சுரண்டும் எண்ணம் உள்ள ஒருவருடைய தவறான தொடர்பு மற்றும் நடவடிக்கைகளால் நமக்கு ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறதென்றால், இதனால் நாம் மனமுடைந்து போகாமல், ஆத்திரம் வந்து நிதானம் இழக்காமலிருந்தால் அதே ஆயிரத்தை பத்தாயிரமாகவோ அல்லது இலட்சமாகவோ நம்முடைய Higher Selfஏ நமக்குத் திருப்பித் தரும். இம்மாதிரியே நம்மோடு பிஸினஸ் ப்ராஜெக்ட்டில்



பார்ட்னர் ஆக வந்தவர் நமக்குரிய பங்கை பிரித்துக் கொடுக்காமல், சொன்ன வார்த்தையைக் காப்பாற்றாமல் எல்லாவற்றையும் அவரே எடுத்துக் கொண்டு போனாலும் நம்முடைய அறிவை ஆச்சரியத்தில் மூழ்க வைக்கும் வகையில் நம் கையை விட்டுப்போனதைவிட பல மடங்கு பெரிய இன்னொரு புதிய ப்ராஜெக்ட்டை நம்முடைய Higher Selfஏ நமக்குக் கைமேல் பலனாக டெலிவரி செய்யும். நாலு பேர் பொது இடங்களில் அவமானப்படுத்தி, உதாசீனப்படுத்தியிருந்தால் அதனால் நம் சமநிலையை இழக்காமல் நாம் அமைதியாக இருந்தால் இம்மாதிரி நூறு பொதுநிகழ்ச்சிகளுக்குப் பின்னால் நமக்கு அழைப்பு வரும். நாமே வெட்கப்படுமளவிற்கு நம்மைப் புகழ்ந்து பாராட்டி பல பேர் ஓயாமல் பேசுவார்கள். இம்மாதிரியே ஆதாயத்தைத் தேடுகின்ற பரிவு மற்றும் பாசத்தின் அருமையை உணராத அற்ப மனிதர்களிடம் நம்முடைய அன்பையும் பிரியத்தையும் அளவு கடந்து வழங்கி இன்று ஏமாந்து நிற்கிறோம் என்ற நிலையில் நாம் இருக்கலாம். அதனால் இதற்காக வருத்தப்பட்டு தண்ணீரில்லாத பாலைவனத்தில் துவண்டு போயிருக்கின்ற செடியைப் போல நாம் வாடிப் போக வேண்டாம். மனித சுபாவத்தைப் புரிந்து கொள்வதற்காக உணர்ச்சி லெவலில் நஷ்டப்பட்டு இப்படி ஒரு பாடம் கற்றுக் கொண்டதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் இந்தப் பாடத்தை எப்பொழுது கற்றுக் கொண்டுவிட்டோம் என்று நம்முடைய Higher Selfக்கு புரிகிறதோ அப்பொழுதிலிருந்து அது நம் வாழ்க்கையை நேர் எதிராக மாற்றி, வறண்டு போன உள்ளங்களைக் கொண்டுள்ள பழைய ஆட்களுக்குப் பதிலாக அன்பாலும் ஆதரவாலும் நம்மைத் திணறடிக்கின்ற அளவு கடந்த நல்லெண்ணம் கொண்ட புது உறவுகளை நம்முடைய Higher Selfஏ நமக்கு நிரந்தரமாக ஏற்படுத்திக் கொடுக்கும்.

நம்முடைய Higher Selfக்கு இவ்வளவு பெரிய ஆற்றலும்

திறனும் இருக்கும் போது சின்ன புத்தி கொண்ட மனிதர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு நம்முடைய நேரத்தையும் எனர்ஜியையும் நாம் ஏன் வீணடிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய Higher Self நமக்கு வழங்கக்கூடியது கோடீஸ்வரனுடைய சேவிங்ஸ் போன்றது. Lower selfஇல் இருப்பவர்கள் நம்மிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போவதென்பது கோடீஸ்வரனுடைய பிக்பாக்கெட்டில் இருக்கின்ற சில்லரைக் காசுகளைக் குப்பத்துச் சிறுவர், சிறுமியர்கள் பிக்பாக்கெட் அடித்துப் போவது போன்றது. எவ்வளவுதான் சில்லரைகள் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டாலும் கோடீஸ்வரனுடைய கோடிக்கணக்கிலிருக்கின்ற பாங்க் பாலன்ஸ் சிறிதளவும் குறையாது. பெருந்தன்மையான கோடீஸ்வரரென்றால் குப்பத்துச் சிறுவர், சிறுமியரைப் பார்த்து, “உங்களுக்குத் தினமும் ஐஸ்கிரீம் வாங்கவும், மிட்டாய் வாங்கவும் தானே சில்லரை வேண்டும்? இதற்கு ஏன் பிக்பாக்கெட் அடிக்கிறீர்கள்? பிக்பாக்கெட்டே அடிக்க வேண்டாம். என்னிடம் நேரடியாகவே வந்து கேளுங்கள். ஒன்று சில்லரையாகவே தருகிறேன், அல்லது ஐஸ்கிரீமும் மிட்டாயுமாகவே வாங்கித் தருகிறேன். நீங்களும் ஜாலியாக ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டு என்னோடு வாருங்கள். அதை விட்டுவிட்டு வாக்கிங் போகின்ற சமயத்தில் என் பாக்கெட்டில் கையை விடாதீர்கள்” என்று அமைதியாக அவர்களிடம் பேசி அவர்கள் மனதை மாற்றுவார். இப்படி ஒரு கோடீஸ்வரர் குப்பத்துச் சிறுவர், சிறுமியரிடம் பெருந்தன்மையாக நடந்து கொள்வதைப் போல நம்மைத் தொந்தரவு செய்யும் Lower selfஇல் உள்ள மனிதர்களிடம் நாமும் பெருந்தன்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

இதுவரையிலும் Higher Selfஐப் பற்றி ஒரு general instruction கொடுத்தேன். இப்பொழுது Higher Selfனுடைய இயற்கையும் தன்மையும் என்ன, மற்றும் அதனுடைய நியதிகளும்



செயல்படும் விதிமுறைகளும் என்ன என்று பார்ப்போம். நமக்குள் இருக்கின்ற இறை அம்சமான ஆங்கிலத்தில் 'Psychic Being' என்றும் தமிழில் ‘சைத்தியபுருஷன்’ என்றும் சொல்லப்படுவதைத் தான் நான் Higher Self என்கிறேன். இந்த Psychic Being என்ற Higher Self எந்நேரமும் ஓர் ஆனந்தத்தில் தான் இருக்கிறது. இதனுடைய spiritual energyக்கு அளவே கிடையாது என்று சொல்லும் அளவிற்கு அது Infiniteஆக உள்ளது. நாம் ஒரு கோடி தடவை கூட Higher Selfனுடைய எனர்ஜியை பயன்படுத்தினாலும் அது சிறிதளவும் குறையாது. இதிலிருந்து வெளிப்படக்கூடிய ஒளியினுடைய பிரகாசம் எப்படிப்பட்டது என்று சொல்ல வேண்டும் என்றால் நடுப்பகலில் தெரிகின்ற ஆயிரம் சூரியனின் பிரகாசத்தைவிட இதனுடைய வெளிச்சம் அதிகமானது என்று சொல்லலாம். கோடை வெயிலில் நடுப்பகலில் சூரியனை நேரடியாக இரண்டு நிமிடம் பார்த்தால் கூட அது நம் கண் பார்வையை பாதிக்கும். ஆனால் நம் Higher Selfனுடைய வெளிச்சம் சூரியனைவிட பிரகாசமானது என்றாலும் அதைப் பார்ப்பதால் நம் கண்கள் கூசாது, வலிக்கவும் செய்யாது. அந்த வெளிச்சத்தில் இறை ஞானம், இறை அன்பு, இறை பலம், தெய்வீக சாந்தி மற்றும் தெய்வீக மௌனம், மற்றும் தெய்வீக ஆனந்தம், எனர்ஜி என்று நமக்குத் தெரிந்த எல்லா positive Divine vibrationsகளும் அடங்கி இருக்கின்றன. ஒரு ரேடியோ செட்டிற்குள் ரேடியோ அதிர்வலைகள் நுழைவது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அம்மாதிரியே நம்முடைய Higher Self என்பது மேற்கூறிய Divine vibrationகளை எல்லாம் கண்ணுக்குத் தெரியாத வகையிலும் ஒரு non-physical முறையிலும் ஒரு ஒட்டுமொத்த all-in-one packageஆக நம்முடைய surface personalityக்கு நிமிடத்தில் வழங்கி விடுகிறது.

*தொடரும்....*

❃❃❃

# அன்பர் அனுபவம்

***மாம்பலம் தியானமையத்தில் இரண்டாம் ஞாயிறு அன்று அன்பர்கள் கூறிய அனுபவங்கள்.***

ஒரு தொழிலதிபர் அன்னை அன்பர். அவரது தொழிலாளி அவரை ஏமாற்றிவிட்டான். கடுங்கோபம் வந்தது. ஸ்ரீ அப்பாவின் அறிவுரைகளை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். தொழிலாளி மீதுள்ள கோபத்தையும், வெறுப்பையும் நீக்கிவிட்டு, இவைதான் தனது தொழிலுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும்படி ஸ்ரீ அப்பா அவர்கள் அறிவுரை வழங்கினார். பிறகென்ன சொல் மந்திரமாயிற்றே, அன்பரும் ஏற்றுக் கொண்டார், அவரது தொழிலும் பல்மடங்கு பெருகியது.

✡✡✡

வங்கி லாக்கர் சாவியை அன்பர் தொலைத்துவிட்டார். என்ன செய்வது, ஒன்றும் புரியவில்லை. ரூ.3500 அபராதம் கட்டினால் லாக்கரை உடைத்து திறந்து கொடுப்பதாக வங்கி அதிகாரிகள் கூறினர். அன்பருக்கு அதில் இஷ்டமில்லை. அன்னை எப்படியாவது சாவியைத் தேடிக் கொடுப்பார் என நம்பிக்கை இருந்தது. இரண்டு வருடங்களாகியும் நம்பிக்கை குறையவில்லை. இதில் நடுவே ஒரு முறை வீட்டை மாற்றியும் உள்ளார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு வீட்டில் உள்ள ஒரு பெட்டியைத் திறந்து பார்த்தால், ஏகப்பட்ட சாவிக் கொத்துக்கள். அதில் லாக்கர் சாவியும் அன்பரைப் பார்த்து சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

✡✡✡

இவ்வனுபவத்தை கேட்டு வீட்டிற்குச் சென்ற மற்றொரு அன்பருக்கு ஒரு வருடமாய் காணாமல் போன சாவி கிடைத்தது. இவர் பிரார்த்தனையும் செய்யவில்லை. காணாமல் போன சாவியைப் பற்றி நினைக்கவுமில்லை. கேளாமலேயே கொடுக்கும் தாய், ஸ்ரீ அன்னை.

✡✡✡



ஒரு அன்பருக்குத் தன் கைக்கடிகாரத்தை எங்கு வேண்டுமானாலும் கழட்டி வைக்கும் பழக்கம் உண்டு. சில சமயங்களில் குளியலறையில் இருக்கும். பல சமயங்களில் தவறி விழுந்துவிடக்கூடிய இடங்களிலும் வைப்பதுண்டு. கடிகாரம் கீழே விழுந்த சந்தர்ப்பங்களும் உண்டு. பழுது பார்க்க கடையை நோக்கி ஓடுவார். அம்மாதிரி ஒரு சமயத்தில் இனி கைக்கடிகாரத்தைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என உறுதி பூண்டார். தினமும் ஒரே இடமாக அதனை கழட்டி வைக்க ஆரம்பித்தார். விரைவிலேயே அவருக்கு நான்கு புது கைக்கடிகாரங்கள் அன்பளிப்பாக கிடைத்தன.

✡✡✡

மழைக்காகப் பல மாதங்கள் தொடர்ந்து பிரார்த்தனை செய்து வந்தார் ஓர் அன்பர். திரு. கர்மயோகி அவர்களது மழையைப் பற்றிய புத்தகத்தையும் படிக்கலானார். திடீரென்று ஓர் எண்ணம். ஏன் நாம் நமது நீர் தொட்டியைச் சுத்தம் செய்யக் கூடாது என்று தோன்றியது. நீர் தொட்டியை சுத்தம் செய்தார். காலையில் மழை கொட்டித் தீர்த்தது. கிணற்றில் பத்தடிக்கு நீர் மட்டம் உயர்ந்தது.

✡✡✡

அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக்கும் ஓர் அன்பர், தங்களது நீர் தொட்டி நிரம்பி நீர் வீணாவதைக் கண்டார். நெடுநேரம் நீர் வழிந்தும், மோட்டார் நிறுத்தப்படாமல் இருக்கும். தான் இறங்கிச் சென்று மோட்டாரை நிறுத்தி வருவார். மற்றவர்கள் இதைப் பற்றி ஒரு துளியும் கவலைப்பட காணோம். காவலாளியும் உபயோகமற்றவனாக இருந்தான். இது அவனது வேலை என்றாலும் பொறுப்பற்றதனமாக இருந்தான். இதை எப்படி சரி செய்வது? ஒவ்வொரு முறையும் தானே சென்று ஸ்விட்சை அணைக்க வேண்டுமா அல்லது வேறு ஏதேனும் உபாயம் இருக்குமா என யோசிக்க ஆரம்பித்தார். தான் எவ்வாறு எல்லாம் நீரை வீணாக்குகிறோம் என யோசித்த போது ஒரு பொறி தட்டியது. குளியல் அறையில் இருக்கும் வாளி நிரம்ப குழாயைத் திறந்துவிட்டு,

அது நிரம்புவதற்குள் வேறு வேலை செய்துவிட்டு வரலாம் என்று நகர்ந்தால் அந்த வேலையில் முதல் வேலை மறந்துவிடும். தவறாமல் வாளி நிரம்பி வழிந்து நீர் வீணாகிக் கொண்டிருக்கும். சரி, இனிமேல் இதனை திருத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து, அவ்வாளி நிரம்பும் வரை அருகிலேயே இருந்து குழாயை மூடிவிட்டு அடுத்த வேலையை கவனிக்க ஆரம்பித்தார். வியக்கத்தகும் வகையில் நீர்த்தொட்டி நிரம்பி வழியவில்லை. அப்படியே வழிந்தாலும் காவலாளியோ அல்லது மற்றவர் எவரேனுமோ ஸ்விட்சை அணைத்து விடுவதைக் கண்டார்.

***

அன்பரது சகோதரர் வேலை முடித்து வீடு திரும்ப இரவு நேரமாகிவிடும். தமக்கை சாப்பாட்டை மேஜை மீது வைத்து விடுவார். சகோதரர் உணவருந்திவிட்டு எல்லாவற்றையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிடுவார். தமக்கை பிறகு வந்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி வைப்பார். ஒரு நாள் வந்து பார்த்தால் மேஜை, சமையல் அறை எல்லாம் சுத்தமாக துடைத்து வைக்கப்பட்டிருந்தது. சகோதரிக்கு ஒரே வியப்பு. இந்த மனமாற்றத்திற்கு என்ன காரணம் என சகோதரரிடம் கேட்டார். அதற்கு அவர், ‘‘வந்து பார்த்தேன். சமையலறை எல்லாம் படுசுத்தமாக இருந்தது. என்னால் அது வீணாகக்கூடாது என்று நான் சாப்பிட்டு முடித்தபின் எல்லாவற்றையும் மீண்டும் சுத்தம் செய்து அதற்குரிய இடங்களில் வைத்துவிட்டேன்” என்றார். சகோதரி அதிகாரம் செய்யவில்லை, ஏன் செய்யவில்லை என்றுகூட கேட்கவில்லை. வேலை தானாகவே நடந்தது.

***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# 80 நாள் உலகம் சுற்றும் பயணம்

1872 பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிறந்த வருஷம். உலகத்தை அன்று சுற்றி வர 100 நாளாகும். தடை ஏற்பட்டால் மேலும் 10 அல்லது 20 நாளாகும். ஒரு இலண்டன் தினசரி 80 நாளில் அதைச் செய்யலாம் என விவரம் கொடுத்தனர். இலண்டன் - சூயஸ்: 3 நாள்; சூயஸ் - பாம்பே: 13 நாள்; பாம்பே - கல்கத்தா: 3 நாள்; கல்கத்தா - ஹாங்காங்: 3 நாள்; ஹாங்காங் - ஜப்பான்: 6 நாள்; ஜப்பான் - சான்பிரான்ஸிஸ்கோ: 22 நாள்; சான்பிரான்ஸிஸ்கோ - நியூயார்க்: 7 நாள்; நியூயார்க் - இலண்டன்: 7 நாள், மொத்தம்: 80 நாள். இதைப் படித்தவர் 'இது நடக்காது' என்றார். கேட்டுக் கொண்டிருந்த பீலியஸ் பாக் 'முடியும்' என்றார்.

'ஒரு கனெக்ஷன் தவறினாலும் முடியாது' என்றார் அவர். **'எந்தக் கனெக்ஷனும் தவறாது' என்றார் பாக்**. 'ஏன் நீங்கள் அதைச் செய்யக் கூடாது' என்றார் அடுத்தவர். '£20,000 பந்தயம். நான் செய்கிறேன்' என்று பாக் ஒத்துக்கொண்டு டிசம்பர் 21ஆம் தேதி 8.45க்கு - 80ஆம் நாள் வருவதாகப் புறப்பட்டார். அவர் வேலைக்காரனை உடன் அழைத்துப் போனார்.

அதே சமயம் பாங்கில் £55,000 திருடு போனதை போலீஸ் விவரித்தது. பிக்ஸ் என்ற துப்பறிபவர் அடையாளம் பொருத்தமாக இருப்பதால் தவறாக பாக் திருடன் என நம்பி அவரை சூயஸிலிருந்து தொடர்ந்து கல்கத்தாவில் ஒரு கேஸ் ஜோடித்து அரெஸ்ட் செய்தார். பாக் £2000 ஜாமீன் கொடுத்து உடன் வெளியேறினார். ஹாங்காங்கில் பிக்ஸ் தன்னை தொடர்வதையறியாத பாக் புறப்படும்பொழுது கப்பல் போய்விட்டது எனக் கண்டார். வேலைக்காரனைக் காணோம். பிக்ஸ் வேலைக்காரனுக்குப் போதை கொடுத்து பாக் கப்பல் தவறச் செய்தான். பாக் வேறு ஒரு படகு எடுத்துக் கொண்டு புயலை வென்று ஜப்பான் வந்து தற்செயலாக வேலைக்காரனைக் கண்டார். பிக்ஸ் இவருடனே பிரயாணம் செய்கிறார். அமெரிக்காவில் இவர் பிரயாணம் செய்த ரயில் தாக்கப்பட்டு வேலைக்காரனைப் பிடித்துக் கொண்டு போய்விட்டனர். பாக் இராணுவ உதவியுடன் வேலைக்காரனைக் கண்டுபிடித்தார். ஒரு நாள் போய்விட்டது. நியூயார்க்கில் கப்பல் தவறிவிட்டது. சிறு கப்பலை வாடகைக்கு எடுத்து அதில் கரியில்லாததால் அதை விலைக்கு வாங்கி கப்பலை உடைத்து கொளுத்தி நேரத்தில் இங்கிலாந்து வந்து சேர்ந்தார். பிக்ஸ் அவரை அரெஸ்ட் செய்தார். மூன்று மணி நேரம் கழித்து தவறு தெரிந்து விடுதலை செய்தார். ரயில் தவறியது. ஸ்பெஷல் ரயில் எடுத்து வந்து லண்டன் சேர்ந்தபொழுது 8.45க்குப் பந்தயம் தோற்றது 8.50 ஆகியது. அனைவரும் மனம் உடைந்து வீடு திரும்பினர். வேலைக்காரன் மனம் சிதறியது. அதற்கு மேலும் ஒரு காரணம் உண்டு. வேலைக்காரனுக்கு பிக்ஸ் துப்பறியும் போலீஸ் எனத் தெரியும். வேலைக்காரன் பாக்கிடம் போய், "என் தவற்றால் நீங்கள் பந்தயத்தை இழந்தீர்கள். நானே பொறுப்பு. எனக்குத் தண்டனை தர வேண்டும்" என்று கேட்டான். "நான் உன்னைக் குறை கூறவில்லை" என்றார் பாக். அது பெருந்தன்மையான பரந்த மனம். வேலைக்காரன் வெளியே போனவன் அன்று டிசம்பர் 20 என்றும், 21ம் தேதியில்லை என்றும் கண்டு அவசரமாகத் திரும்பி வந்து பாக்கை அழைத்துப் போய் பந்தயத்தை வென்றான்.

***மனமாற்றம், தவற்றை உணர்வது, மகத்தானது, உலகையே வெல்லும்.***

ஜெயித்தாயிற்று. எப்படி எனப் புரியவில்லை. இலண்டனிலிருந்து கிழக்கே போய் உலகைச் சுற்றி வந்ததால் longitude ஒவ்வொரு ரேகையைக் கடக்கும்பொழுதும் 4 நிமிஷம் சுருங்குவதால் 360 ரேகைகளைக் கடக்கும்பொழுது ஒரு நாள் அதிகமாகக் கிடைக்கிறது. அதனால் ஒரு நாள் முன்னதாக வந்தது பாக் என்பவருக்குத் தெரியவில்லை.

- அவ்வளவு பெரிய மகத்தான உண்மை வெளிவந்து காப்பாற்ற உதவியது மனமாற்றம், குறையை உணர்வது.
- பாக் பொறுப்பு தன்னுடையது எனக் கொண்டு வேலைக்காரனைக் குறை கூற மறுத்த பரந்த மனம் உடையவர் என்பதால் வென்றார்.

***ஆசையற்றவனைத் தேடி ஆசைக்கு எட்ட முடியாதது***
***தேடி வந்து ஏற்றுக் கொள்ள மன்றாடும்.***

❋❋❋

# ஆசை

ஒருவன் ஆழ்ந்து ஆசைப்பட்டது பலிக்காமற் போகாது. **ஆசை தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும் திறனுடையது**. ஆசைப்பட்டவர் கொள்ளி வைக்காமல் உடல் எரியாது எனவும் அனுபவம் உண்டு. முன்பக்க அட்டைக் கதையில் பீலியஸ் பாக் பம்பாய், கல்கத்தா பயணம் ரயில்வே பூர்த்தியாகாமல் 100 மைல் யானை மேல் போகிறார். சதி - உடன்கட்டை ஏறுவதை - வழியில் பார்க்கிறார். அளவுகடந்த தைரியத்துடன் இரவில் 100 பேர் கூட்டத்தை ஏமாற்றி 5 பேர் எரியயிருக்கும் பெண்ணைக் காப்பாற்றுகிறார். காப்பாற்றியவர் அவளை அவர் உறவினரிடம் ஹாங்காங்கில் சேர்க்க முயல்கிறார். அவர் ஹாலந்திற்குப் போய்விட்டதால், அவளை இலண்டனுக்கு அழைத்துப் போகிறார். அவள் பண்டல் கண்ட் மகாராணி. பம்பாயில் பெரிய பார்சி குடும்பத்தில் பிறந்து சிறந்த படிப்பு பெற்றவள். வயதான ராஜா ஆசைப்பட்டுத் திருமணம் செய்து கொள்கிறார். சீக்கிரம் இறந்து விடுகிறார். உடன்கட்டை ஏறும் காலம் (1872ஆம் ஆண்டு) என்பதால் சுடுகாட்டிற்கு அவளுக்குப் போதை மருந்து கொடுத்து அழைத்துப் போகின்றனர். இந்த விவரங்களை பீலியஸ் பாக் பாகன் மூலம் அறிந்து அவளைக் காப்பாற்ற முயல்கிறார். 100 பேர் கூட்டத்தில் 5 பேர் இம்முயற்சியைச் செய்தால் உயிருக்கு ஆபத்து. இரவில் அனைவரும் உதயத்தில் எரிக்க வேண்டி தூங்கும்பொழுது இவருடைய வேலையாள் ராஜா உடல் மீது படுத்து ராணியைத் தூக்கிக் கொண்டதை இறந்த அரசனின் ஆவி எழுந்ததாகக் கொண்டு அனைவரும் பீதியடைந்து ஓடிவிட்டனர். விஷயம் புரிந்து அவர்கள் ராணியைத் தொடரும்முன் யானை வேகமாகத் தப்பித்துக் கொண்டது. இரண்டு மாதம் ராணியும் பீலியஸ் பாக்கும் உடன் பிரயாணம் செய்கின்றனர். இலண்டன் வந்து பந்தயம் தோற்றுத் திவாலானபின் ராணி அவரைத் தன்னை மணக்கும்படிக் கேட்கிறாள். அவள் பேர்போன பேரழகி ராணி. அவருக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. அதுவரை அவள் மீது அவருக்கு ஆசை எழவில்லை. கடமை மட்டுமிருந்தது. திருமணத்திற்காக சர்ச்சில் ஏற்பாடு செய்தபொழுது ஒரு நாள் முன் வந்ததை அறிந்து பந்தயம் ஜெயிக்கிறது.

- பீலியஸ் பாக் வெற்றி பெற்றதற்குரிய காரணங்கள் பல.
- தான் உயிரைக் காப்பாற்றி பேரழகி ராணியுடன் இரண்டு மாதம் பிரயாணம் செய்தபொழுது அவருக்கு அவள் விஷயத்தில் கடமையை மட்டும் ஆற்ற முடிகிறது. ஆசை எழவில்லை.
- ஆசை எழவில்லையெனில் அவர் ஆசையை வென்றவர்.
- ஆசையை வென்றவர்க்கு அகிலம் அடங்கும்.
- அது அவர் வெற்றிக்கு முக்கிய காரணம்.

***மோட்சம் பெறுவதைவிட***
***ஆசையை வெல்வது மனித ஆத்மாவுக்குச் சிரமம்.***

❋❋❋

Vol. II Issue 2 May 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

கர்மயோகியின்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆ : (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆ : (044)-24347191


Vol. II Issue 2 May 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மே 2012